Registered as a Newspaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM　மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -10

நாதம் 14　திருவள்ளுவர் ஆண்டு 2034　ஐப்பசி -04　21-10-2003　செவ்வாய்க்கிழமை　ஓசை 245




-இந்தியத் தலைவர்கள் -ரணில் சந்திப்பு

## பாதுகாப்பு உட்பட பல்வேறுவிடயங்களில் இந்..சிறிலங்கா ஒத்துழைப்பு உடன்பாடு!

(டில்லி)

டில்லிக்கு விஜயம் செய்துள்ள சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்தியப் பிரதமர் வாஜ்பாய், துணைப் பிரதமர் அத்வானி, வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த்சிங்ஹ உட்பட்ட அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்புக்களின் போது சிறிலங்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்பான உடன்பாடு குறித்தும் இணக்கப்பாடு ஏற்பட்டது.

இதன் பிரகாரம் இந்து சமுத்திர நடவடிக்கைகள் தொடர்பாக இரு நாடுகளும் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளன.

புதுடில்லியில் நேற்று சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்த் சிங்ஹவும் இதற்கான இணக்கப்பாட்டைக் கண்டனர். தமது கடற்பிரதேச எல்லைகளுக்கு அப்பால் மீன்பிடிப்பிற்கு கடற்றொழிலாளர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிவகைகளும் இந்த உடன்பாட்டில் சேர்த்துக் கொள்ளப்படும். கடற்றொழிலில் நவீன தொழில்நுட்ப உருவாக்கல்

(10 ஆம்பக்கம் பார்க்க)

## ரணில்-அமெ.சனாதிபதி சந்திப்பிற்கு ஏற்பாடு

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தமாத நடுப்பகுதியில் அமெரிக்காவில் ஜோர்ஜ் புஷ்சை சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்துதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்குகளை செய்வதற்காக கடந்த வாரம் வாஷிங்டன் சென்றிருந்த விஞ்ஞான பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட அமெரிக்க ராஜாங்க வாசஸ்தலத்துக்கு சென்று இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.வாஷிங்டனில் உலக வங்கியின் அதிகாரிகள் மற்றும் சர்வதேச நிதிநிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தையை நடத்தியிருந்த அமைச்சர் மிலிந்த மொறகொட, சிறிலங்காவின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுவரும் முன்னேற்ற நிலைமை குறித்து விளக்கமளித்திருந்தார். இதன் பின்னர் உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பிரித்தானியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் மலிந்த மொறகொட பிரதமருடன் இணைந்து கொள்வதற்காக லண்டனில் இருந்து நேரடியாக புதுடில்லிக்கு சென்றிருக்கின்றார்.

# சனாதிபதியின் உத்தரவின் அடிப்படையில் கிழக்குக் கடலில் தீவிர கண்காணிப்பு!

## சந்திரசேகரன், தொண்டமானை தமிழ்ச் செல்வன் சந்திப்பார்

மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் மற்றும் இ.தே.க.தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் தனித்தனியே சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதனடிப்படையில் எதிர்வரும் 23ஆம் திகதி மலையக மக்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கப்பல் விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் படைஅதிகாரிகளுடன் பேச்சு!

(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின்பேரில் கிழக்குக் கடற்பகுதியில் தீவிர கண்காணிப்பை ஏற்படுத்தியுள்ளதாக சிறிலங்கா கடற்படை கூறுகிறது. இதேவேளை புலிகளின் கப்பல் விவகாரம் குறித்து பாதுகாப்பு அமைச்சர் நேற்று படைஅதிகாரிகளுடனும் யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுவினருடனும் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.**

கடந்த வெள்ளிக்கிழமை முல்லைத்தீவு கடலில் தமிழீழ விடுதலைப்புலிகளுடையது எனக் கூறப்படும் ஆயுதக்கப்பலை தாம் சோதனை செய்ய முற்பட்டபோதும் அது தொடர்பான தகவலை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வழங்கி விட்டதாகவும், இதன் காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் தமது கப்பலை நகர்த்தி விட்டதாகவும் கடற்படை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மீது குற்றம் சுமத்தியுள்ளது. இது தொடர்பில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு தனது மறுப்பை வெளியிட்டுள்ளது. நாம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு கூறியுள்ளது. இந்த நிலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

வயது குறைந்த பிள்ளைகளை

## பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய மூன்று சந்தேக நபர்களுக்கு பிணை மறுப்பு

(செட்டிகுளம்)

வயது குறைந்த பிள்ளைகளினை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உற்படுத்தியதாக சந்தேகிக்கப்படும் மூன்று இளைஞர்களின் பிணை மனுவினை வவுனியா நீதிமன்றம் மறுத்துள்ளது.

இம்மாத முற்பகுதியில் வவுனியா மகாரம்பைக்குளம் பகுதியினைச் சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகளினை மன்னாருக்கு அழைத்துச் சென்று இரவு விடுதியில் தங்கவைத்து பாலியல்

(10 ஆம் பக்கம் பார்க்க)

கடலில் கப்பல்களைப் பரிசோதிப்பதற்கு

## புதிய வழிமுறைகள் குறித்து கண்காணிப்புக்குழு – அரசு ஆலோசனை

(கொழும்பு)

கடலில் வரும் கப்பல்களைப் பரிசோதிக்க புதிய பரிசோதனை வழிமுறைகள் கடைப்பிடிப்பது பற்றி நாம் ஆராய்ந்து வருகிறோம். அவற்றை நான் இப்போது வெளியிட விரும்பவில்லை என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வழிமுறை குறித்து கடற்படை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் சேர்ந்து ஆலோசித்து வருகின்றோம். யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை விலக்கிச் செயற்படுவது என்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

17.10.2003 அன்று மட்டு மாவட்டத்தில் பயிற்சியின்போது கடலில் மூழ்கிபோராளி ஒருவர் சாவடைந்துள்ளார்.

2ஆம் லெப். கிசோந்தன் (பொன்னையா ஞானசேகரம், கணேசவித்தியாலய வீதி, வந்தாறுமூலை மட்டக்களப்பு) என்ற போராளியே சாவடைந்தவராவார்.

இவருக்கு தமிழீழவிடுதலைப் புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

மன்னார் உயிலங்குளத்தில்

## தனியாக இருந்த பெண் மீது இனம்தெரியாதோர் பாலியல் வல்லுறவு

(மன்னார்)

மன்னார் உயிலங்குளம் கிராமத்தில் வீட்டில் தனியாக இருந்த இளம் பெண் ஒருவர் இனந்தெரியாதவர்களால் பாலியல் வல்லுறவிற்குள்ளாக்கப்பட்டுள்ளார்.

இதனால் மயக்கமடைந்திருந்த 32 வயதான இந்த இளம் பெண் சில மணித்தியாலங் களின் பின் அங்கு வந்த அவரது உறவினர்களால் மன்னார் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்

(10 ஆம்பக்கம் பார்க்க)

## பலாலி விமானத் தள ஓடுபாதை இந்தியா புனரமைக்கும்

பலாலி விமானத்தளத்தின் ஓடு பாதையைப் புனரமைக்க இந்தியா முன்வந்துள்ளது.இருப்பினும், இப்பாதையை இந்தியா புனரமைப்பின் இவ்விமான நிலையத்தை எதிர்காலத்தில் புலிகள் பயன்படுத்த இந்தியா அனுமதிக்காது என்ற நிலைமையிலேயே இந்தியா இப்புனரமைப்பைச் செய்யும் என்றும் இந்தியா கூறியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த ஓடுபாதை புனரமைப்பு குறித்த உடன்பாடு ஒன்றும் தற்போது இந்தியாவில் தங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்திய அதிகாரிகளுடன் செய்து கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## இடைக்குறிச்சி, வரணி மக்கள் தமது காணிகளிலிருந்து படையினரை வெளியேறுமாறுவற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியின் இடைக்குறிச்சி,வரணி ஆகிய பிரதேசங்களில் உள்ள தனியார்காணிகளில் முகாம் அமைத்துத் தங்கியுள்ள படையினரை வெளியேற்றி தமது சாந்தக்காணிகளுள் பிரவேசிக்கும் அனுமதியைப் பெற்றுத்தருமாறு அக்காணிகளின் உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் 50ற்கு மேற்பட்ட தனியார் காணிகளை உள்ளடக்கி படைமுகாம் அமைத்துத் தங்கியுள்ள படையினர் அக்காணிகளுள் காணப்படும் பயன்தரு மரங்களான தென்னை மற்றும் பனை உட்பட்ட மரங்களைத் தறித்தும் காவலரண்களை அமைக்கப் பயன்படுத்துவதுடன் ஆழமான குழி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கண்டல் பாலம் ஊடான போக்குவரத்து முற்றாகத் தடை

(அலுவலக செய்தியாளர்)

நீண்ட காலமாக திருத்தப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருந்த கண்டாவளை வெலிக்கண்டல் பாலம் புனரமைக்கப்படவிருப்பதால் பரந்தன் முல்லை. வீதியில் மேற்படி பாலம் ஊடான போக்குவரத்து இன்று இரவு 7.00 மணி முதல் மறு அறிவித்தல் வரை முற்றாகத் தடை செய்யப்படுவதாக தமிழீழ காவல்துறையின்வீதிப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### அமல் பல், மூக்குக் கண்ணாடி அகம்

கண்பரிசோதித்து தகுந்த பார்வைக்கு ஏற்ற கண்ணாடி வழங்குதல், பல் கட்டுதல், பல் கிளிப் போடுதல் போன்றன உடன் செய்து கொடுக்கப்படும். தொடர் புக்கு:- பரந்தன்வீதி, புதுக்குடியிருப்பு. (3713)


## வேலைநிறுத்தம்

சம்பள உயர்வு மற்றும் தொழில் துறையின்பல்வேறுகோரிக்கைகளை வலியுறுத்தி, இன்று அரசாங்க தொழிற்துறை தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. ஆசிரியர்துறை தபால்,ரயில்வே, உட்பட்ட தொழிற்சங்கங்கள் இதில் பங்கேற் கின்றன. எனினும் சிறிலங்கா சுதந் திரக்கட்சியின் தொழிற்சங்கங்கள் இதில் பங்கேற்கப்போவதில்லை என அறிவித்துள்ளன. (32)

# வட - கிழக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் போராட்டத்தைத் தீவிரமாக்க முடிவு

தமது நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடக்குக் கிழக்கு மாகாணப்பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தமது போராட்டத்தை மேலும் தீவிரமாக்குவதற்குத் தீர்மானித்துள்ளனர். இது தொடர்பாக வடக்குக்கிழக்கு மாகாணப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் நேற்று பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி வலயப்பணிமனையில் முக்கிய கூட்டம் ஒன்றினை நடத்தியது. இதற்கான ஒழுங்கமைப்புகளை கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம் அவர்கள் மேற்கொண்டிருந்தார். கிளிநொச்சி மாவட்டத்தில் நிரந்தர நியமனம்கோரும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். எதிர்வரும் நாட்களில் தமது நிரந்தர நியமனம் கோரும் செயற்பாடுகளை பெரும் போராட்டமாக மீண்டும் மேற்கொள்ள இக்கூட்டத்தில் அறைகூவல் விடுக்கப்பட்டதுடன்.

கிளிநொச்சி மாவட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் மீள ஒழுங்கமைக்கப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சுப் பணிமனைமுன் தொடரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் இப் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் தொடர்ந்து பங்குபற்றுவர் என முடிவு செய்யப்பட்டது. நாற்பது வரையான ஆசிரியர்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பிரதிநிதிகள் விரைவில் நடைபெறவிருக்கும் பெரும் போராட்டத்திலும் பங்குபற்றுவது என முடிவு எடுக்கப்பட்டது.

# பிரேத ஊர்வலத்தின் போது வெடி கொழுத்தத் தடை!

(யாழ்ப்பாணம்)

பிரேத ஊர்வலம் செல்லும் போது வெடி கொழுத்துவதற்கு யாழ் படையினர் தடை விதித் துள்ளனர். இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது.

கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு பூதவுடல் எடுத்து சென்ற போது வழக்கம்போல சீன வெடிகளை வெடிக்க வைத்த போதே படையினர் இவ் எச்சரிக் கையைப் பிறப்பித்துள்ளனர். மேற்படி செயற்பாடு தமது பாது காப்பிற்கும் படையினரின் மன நிலைக்கும் குந்தகமாக அமையும் என்பதைக் காரணம் காட்டியே படையினர் இவ்எச்சரிக் கையையும் தடை உத்தரவையும்பிறப்பித்துள்ளனர். (33)

# நாட்டுப்பற்றாளர் கந்தசாமி நினைவுநாளும் முதியோர்தின விழாவும் அனுஷ்டிப்பு

(அலுவலக செய்தியாளர்)

முதியோர் தின விழாவும் நாட்டுப்பற்றாளர் முருகேசு கந்தசாமி அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வும் கடந்த 18ஆம் திகதியன்று கிளிவன்னேரிக்குளம் யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தில் நடைபெற்றது.முதியோர் இல்ல தலைவரும் கரைச்சி பிரதேசச் செயலருமான பொன் நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மூதாளர் பேணலக பணிப்பாளர் குரு.வண பிதா மதுரநாயகம் அடிகள், திருநெறிக்கழகத் தலைவர் தமிழ்ஐயா மற்றும் நிர்வாக சேவை உறுப்பினர்கள் கலந்து முதியோர் நிகழ்வினையும் நாட்டுப்பற்றாளர் நிகழ்வினையும் சிறப்பித்ததுடன் இல்லமுதியோர்களுக்கு உடுபுடைவைகள் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது (சோ)


## ஆசிரியர் வெற்றிடம்

மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்தில் நடனமானி ஆசிரியருக்கான வெற்றிடமுள்ளது. தகுதியானவர்கள் 23.10.2003 ஆம் திகதியன்று காலை 11 மணிக்கு பாடசாலைக்கு கல்விச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும். இதே பிரதேசத்தைச் சேர்ந்தோருக்கு முன்னுரிமை. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

அதிபர்.

(சி-7794)

## பாராட்டுகின்றோம்

### செல்வி நிருத்திகா பசுபதிப்பிள்ளை

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற 2003 ஆம் ஆண்டின் தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டியில் கலந்து கொண்டு நான்காம் பிரிவின் சிறுகதை ஆக்கப் போட்டியில் முதலாம் இடம் பெற்று எமது மாவட்டத்திற்கு பெருமை சேர்த்து எமது பணிமனை பதில் மேற்பார்வையாளராகக் கடமையாற்றும் யோகேஸ்வரி பசுபதிப்பிள்ளை அவர்களின் புத்திரி செல்வி நிருத்திகா பசுபதிப்பிள்ளை அவர்களை மனமாறப் பாராட்டுவதோடு, அவர் கல்வியோடு, சகல துறைகளிலும் சாதனை படைக்க எமது நல்லாசிகள்.

சுகாதார வைத்திய அதிகாரியும்,<br>பணியாளர்களும்,<br>சு.வை.அ.பணிமனை,<br>கிளிநொச்சி.

(சி-8666)


## அடுத்தவாரத்தில் பொலிஸ்மா அதிபர் நியமனம்

இலங்கையின் புதிய பொலிஸ்மா அதிபர் நியமனம் அடுத்தவாரம் இடம்பெறும் என சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆனந்தராஜா ஓய்வு பெற்றதை அடுத்து, சனாதிபதியினால் இந்திரா டி சில்வா பொலிஸ்மா அதிபராக பரிந்துரைக்கப்பட்டார் என்றும் அதனை அரசியலமைப்பு நிர்ணயசபை ஏற்றுக்கொள்ளவில்லை. இவருடன் இணைந்ததரம் கொண்ட மேலும் மூன்று சிரேஷ்ட உதவி பொலிஸ்மா அதிபர்கள் சேவையில் இருப்பதால் அனுபவம் குறித்து தரவுகள் திரட்டப்படவேண்டும் என அரசியல்அமைப்பு சபை தெரிவித்தது இந்த நிலையில் இந்த திட்டத்தின் பணிகள் நடைபெற்று வருவதாக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (32)


## செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள முகத்தான்குளம் ஸ்ரீ சித்தி விக்னேஸ்வரர் ஆலய புதிய பரிபாலன சபை

**தலைவர்:** க.சபாரத்தினம்

**செயலாளர்:** க.பாலகிருஷ்ணன்

**பொருளாளர்:** வி.மார்க்கண்டு

**உபதலைவர்:** இ.சரோஜா

**உபசெயலாளர்:** மா.பத்மநாதன்

**போசகர்கள்:** த.துரைச்சாமி<br>(செட்டிகுளம் பிரதேச செயலாளர்)<br>கெங்காசிவக்குருக்கள்<br>(பிரதம குரு –ஸ்ரீசித்தி விக்னேஸ்வரர்)<br>இ.நாகேந்திரராஜா<br>(அகில இலங்கை சைவன் நற்பணிமன்றம் – செயலாளர்)

**ஆலோசகர்கள்:** இ. பாலசிங்கம்<br>ப. சசிகாந்தன்<br>ப. பரராசசேகரம்

**அங்கத்தவர்கள்:**

| | |
|---|---|
| க.சண்முகம்பிள்ளை | ச. நவமணிதேவி |
| க.சிவகுமார் | சி.மகேஸ்வரி |
| து.மங்களேஸ்வரி | சு.கருணாநிதி |
| மு.பாலேந்திரன் | க.ரவீந்திரன் |
| பெ.துளராஜ் | சி.செல்வரத்தினம் |
| ம.துட்சணாமூர்த்தி | |

(சி-8701)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## பருவகாலச்சீட்டு வழங்கல்

பாடசாலை மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டு மாணவர்களின் நலன்கருதி அதிபர் அவர்களால் மாணவர்களின் பெயர், கற்கும்தரம், இடம் ஆகியவற்றை விதந்துரை செய்யப்பட்ட பாட சாலை முத்திரையுடன் பணத்தையும் பெற்று ஒருவர் மூலம் பின்வரும் இடங்களில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டு கின்றோம்.

- பருவகாலச்சீட்டு பெற்றுக் கொள்ளும் இடங்கள்
- மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் சீட்டு வழங்கப்படமாட்டாது.

பேருந்து நிலையம் முல்லைத்தீவு, தமிழீழப்போக்குவரவுக்கழகம் புதுக்குடியிருப்பு, பேருந்து நிலையம் புளியங்குளம், பேருந்து நிலையம் மல்லாவி, பேருந்து நிலையம் முகமாலை, வழி அனுமதிப்பணியகம் பளை, பூநகரி மகாவித்தியாலயம்.

மேற்காட்டிய இடங்களில் 25ஆம் நாள் தொடக்கம் 30ஆம் நாள் வரை வழங்கப்படும். அரச பணியாளர்கள் இதே இடங்களில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,<br>நடுவப்பணிமனை,<br>தமிழீழப்போக்குவரவுக்கழகம்,<br>விசுவமடு.

(சி-8667)


## 2ஆம் ஆண்டு நினைவுமலர்

தாயின் மடியில் 21 ♦ 11 ♦ 1982



தாயக விடுதலைக்காய் 21 ♦ 10 ♦ 2001

### கடற்புலி.லெப்ரினன்ட் நாவரசி

#### சண்முகசுந்தரம் பிறேமினி

மாறாவிலுப்பை, நெடுங்கேணி.

தாயக விடுதலைக்காகப் புறப்பட்ட<br>தமிழீழ நங்கையே நாவரசி<br>தாயின் பாசத்துடன் தயங்காது களம் சென்றாய்<br>தாய் மண் விடிவிற்காய் தங்காது உயிர் தந்தாய்<br>மறப்போமா உன்னையென்றும்.

கடந்த 21.10.2001ஆம் திகதியன்று முல்லைக் கடற்பரப்பில் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவடைந்த இவருடன் வீரகாவியமான அனைத்து மாவீரச் செல்வங்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மாறா இலுப்பை,<br>நெடுங்கேணி.

(3718)

தகவல்:<br>சகோதரி சகுந்தலா,<br>குடும்பத்தினர்.

# அணுவாயுதத் திட்டங்கள் கைவிடப்பட்டால் வடகொரிய பாதுகாப்பிற்கு உத்தரவாதம்!


## உடன்படிக்கைக்கு இடமில்லை என்கிறார் புஷ்

**வடகொரியா தனது அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடுவதற்கு இணக்கம் தெரிவிக்குமானால் அந்த நாட்டின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கப்படும் என்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் கூறியுள்ளார்.**

வடகொரியாவின் அணுவாயுத சர்ச்சை தொடர்பாகத் தடைப்பட்டுப்போயுள்ள பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்கிலேயே புஷ் இவ்வாறு கேட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் நேற்று ஆரம்பமாகியுள்ள ஆசியபசுபிக் பொருளாதாரக் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்டுள்ள புஷ் அங்கு வைத்தே இதனைக் கூறியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பது குறித்து நேச நாடுகளுடன் ஆலோசனை நடத்துபோவதாகக் கூறிய அவர்.



ஆசிய பசுபிக் பொருளாதார மாநாட்டிற்கு முன்பாக பாங்கொக்கில் சீனப் பிரதமர் ஹூஜின்ராவோவுடனான சந்திப்பில் அமெரிக்க சனாதிபதி புஷ்.

இந்தப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதாகவும் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் இந்தவிடயத்தில் எவ்வித உடன்படிக்கைகளும் செய்துகொள்ளப்படமாட்டாது என்றும் கூறியுள்ளார்.

21 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட இந்த ஆசிய பொருளாதார ஒத்துழைப்பு மாநாடு இன்று முடிவடைகின்றது.

கூட்டத்தின் முடிவில் இன்று முக்கிய பிரகடனம் ஒன்று வெளியிடப்படவுள்ளது.

பொருளாதார ஒத்துழைப்புக்கென இந்த அமைப்பு உருவாக்கப்பட்டபோதும், சமகால தேவைகளின் அடிப்படையில் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத் தடை நடவடிக்கைகளும் முக்கியம் பெறுவதாக அமெரிக்கா உட்பட பலநாடுகள் கூறியுள்ளன.

எனினும் இந்த நிலைப்பாட்டிற்கு மலேசியா, தாய்லாந்து உட்பட பல நாடுகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

மலேசியப் பிரதமர் மஹாதிர் முகமது செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த அமைப்பு பொருளாதார ஒத்துழைப்புக்குழு எனும் நிலையில் உருவாக்கப்பட்டது என்றும், பொருளாதாரம் பற்றிய விடயங்களுக்குப் பதிலாக பாதுகாப்புச் சம்பந்தமான பிரேரணைகள் திணிக்கப்படுவதைத் தாங்கள் விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

தாய்லாந்துப் பிரதமர் தட்ஷினும் இதே கருத்தை வெளியிட்டுள்ளார்.

ஆசிய பசுபிக் பொருளாதார கூட்டமைப்பை அச்சுறுத்தும் பயங்கரவாத இயக்கங்கள் கலைக்கப்படவேண்டும் என்றும், ஸ்தம்பிதம் அடைந்துள்ள உலக வர்த்தகப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும், கன்கூம் அமைச்சர்கள் மட்ட மாநாட்டுத் தீர்மானங்கள் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்றும், சர்வதேச அடிப்படையிலான தாராள வர்த்தகம் அபிவிருத்தி அடைய வேண்டும் என்றும் இறுதிப் பிரகடனத்தில் இன்று தெரிவிக்கப்படலாம் என்று இராஜதந்திரி ஒருவர் கூறியுள்ளார்.

### அமைச்சரவை நியமனம்

பொலிவியாவில் 15 உறுப்பினர்கள் கொண்ட புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ளது. சனாதிபதியாக பதவியேற்றுள்ள ஹலோ லிஷா நேற்று முந்தினம் அமைச்சரவை நியமனங்களைப் பற்றி அறிவித்துள்ளார். நடுநிலை அரசியல்வாதிகளும், தொழில் நுட்பநிபுணர்களும் புதிய அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளார்கள்.



பாக்தாத்துக்கு மேற்கே 65கி.மீ. தொலைவிலுள்ள பலூஜா நகரில்நேற்று முன்தினம் குண்டுத்தாக்குதலுக்குள்ளான அமெரிக்க ஆயுதங்கள் ஏற்றப்பட்ட வாகனம் [புகை மண்டலத்தால் மூடப்பட்டுள்ளது காயமடைந்த விபரம் வெளிவரவில்லை]

## மாலைதீவில் சனாதிபதி பதவி கால நீடிப்பிற்குக் கருத்துக்கணிப்பு

மாலைதீவு சனாதிபதி அப்துல் ஹையுமின் பதவிக் கால நீடிப்புக்காக மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

கடந்த 25 வருடங்களாகப் பதவியில் நீடிக்கும் அப்துல் ஹையும் அடுத்த ஆண்டிற்கான பதவிக் காலத்தை நவம்பர் மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளார்.

இவரது பதவிக்காலம் நீடிப்பதை உறுதி செய்வதற்காகவே மக்கள் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு எதிர் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மாலைதீவில் மூன்று இலட்சம் வாக்காளர்கள் இருக்கின்றார்கள் கடந்த காலங்களில் ஹையும் 90 வீதமான வாக்குகளை பெற்றுக் கொண்டுள்ளார் என்பதால் இவ்வருடமும் அதேயளவு வாக்குகளைப் பெற்றுக்கொள்வார் என கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

## இத்தாலிக்குள் நுழைய முயன்ற குடியேறிகள் சடலமாக மீட்பு

### -மூன்று நாட்களில் 2-வது அனர்த்தம்

ஆபிரிக்காவிலிருந்து இத் தாலிக்குள் நுழையமுயன்ற சட்ட விரோதக் குடியேறிகள் 11 பேர் நேற்று முந்தினம் உயிரிழந்துள்ளார்கள். 14 சோமாலியர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

லம்படுகா எனும் இத்தாலியின் தென் பிராந்தியத் தீவுக்கருகே உயிரிழந்தவர்களின் உடல்களுடன் கப்பல் மீட்கப்பட்டுள்ளதாக கடற்கரை பாதுகாப்பு பிரிவினர் அறிவித்துள்ளார்கள்.

கடந்த மூன்று நாட்களில் இது இரண்டாவது அனர்த்தம் ஆகும்.

கடந்த வெள்ளிக்கிழமை குழந்தைகள் உட்பட 07ஆபிரிக்கர்களின் உடல்கள் மீட்கப்பட்டதும் அதே கப்பலில் பயணித்த 25 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே.

நேற்று முன்தினம் இரவு 11.30க்கு அனர்த்தத்திற்குள்ளான இக் கப்பல் கைப்பற்றப்பட்டதாக லம்படுகா அதிகாரிகள் கூறியுள்ளார்கள் அதே நேரம் பயணிகள் மரணத்துக்கான காரணங்கள் கண்டு பிடிக்கப்படவில்லை.

ஆனால் இந்த இரண்டு அனர்த்தங்களுக்கும் மோசமான கால நிலையும், கடல் கொந்தளிப்புமே காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

## வெள்ளப் பெருக்கு 38 பேர் பலி!

வியட்னாமின் மத்திய பகுதியில் கடந்த சில நாட்களாகப் பெய்த கடும் மழையினால் 38 பேர் மரணமாகியுள்ளார்கள்.

ஐந்து மாகாணங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. 7600 ஹெக்ரேயர் வயல்நிலங்கள் வெள்ளத்தால் மூடப்பட்டுள்ளன. இங்குள்ள வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்பதற்கு 20 லட்சம் டொலர்கள் தேவைப்படும் என்று கூறப்படுகின்றது.



ஜோர்தானிலுள்ள அமெரிக்க தூதரகத்தை தாக்கியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட சிறைக் கைதிகளை நீதிமன்றத்துக்கு கொண்டுசெல்வதையும் சிலர் விடுவிக்கக்கோருவதையும் ஒருவர் குற்றத்தை ஏற்கமறுப்பதையும் அவதானிக்கும் ஊடகவியலாளர்கள்.

## மக்களுக்கான அணுசக்தித் திட்டம் ஏற்கப்படின் யுரேனியம் செறிவூட்டல் நிறுத்தப்படும்

### -ஈரானிய சனாதிபதி முகமது கதாமி

(தெஹ்ரான்)

ஈரான் தனது அணு சக்தித் திட்டத்தை பொது மக்களின் நன்மைக்கு செயற்படுத்திட அனுமதிக்கப் படுமேயானால், யுரேனியம் செறிவூட்டலை நிறுத்தக் கூடும் என்று ஈரான் சனாதிபதி முகமது கதாமி கூறியுள்ளார்.

ஈரானின் யுரேனியம்செறிவூட்டல் திட்டம் அணுவாயுத தயாரிப்பிற்கு உபயோகப்படுத்தப் படலாம் என்று சில மேலை நாடுகள் திரும்பத்திரும்பக் கூறிவரும் வேளையில் ஈரான் சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

அணுகுண்டு தயாரிக்கப் பயன்படும் யுரேனியத்தை கொள்வனவு செய்ய பலமேலைத்தேய அரசுகள் காத்திருக்கின்றன.

அமெரிக்கா ஐரோப்பிய நாடுகளின் கொள்வனவிற்கு ஈரான் தரும் பதில் என்ன எனும் வினாவுக்கு,

நாம் இந்த விடயத்தில் மிகவும் அவதானமாக இருக்கின்றோம். நாம் கொடுப்பதற்கு ஏற்ப பெற்றுக் கொள்ள இருக்கின்றோம். எங்கள் உரிமைகளும் பிரச்சினைகளும் அணுவாயுத தொழில்நுட்ப உலகில் தீர்க்கப்படக் கூடிய பதில் கொடுப்பனவுகளை எதிர்பார்க்கின்றோம் என சனாதிபதி கதாமி பதிலளித்துள்ளார்.

## காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் வளர்ச்சிப் பணிகள் பெரும் முடக்கம்

### இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

காங்கிரஸ் ஆட்சியிலுள்ள மாநிலங்களில் வளர்ச்சிப் பணிகள் நடைபெறவில்லையென்று பிரதமர் வாஜ்பாய் குற்றம் சாட்டியுள்ளார். நேற்றுமுன்தினம் போபாலிப் பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மத்திய பிரதேச மாநிலத்தில் ஏராளமான வளங்கள் கொளிக்கின்ற போதிலும் அவை சரிவரப் பயன்படுத்தப் படுவதில்லை என்று கூறியுள்ளார்.

பாலியல் பிரச்சினை உட்பட பெண்களுக்கு எதிரான பிரச்சினைகளில் மத்திய பிரதேசம் தான் முதலிடம் பெற்றுள்ளது என்று அவர் சாடியுள்ளார்.

பயங்கரவாதிகளும் நக்ஸ்ஸலைட்டுக்களும் வன்முறையைக் கைவிட்டு தேசிய பெருவாழ்வில் இணைய வேண்டுமென்று பிரதமர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பயங்கரவாதம் பெரும் சாபக்கேடு என்றும் இது மதத்துடன் கலப்பதனால்எதனையுமே அபாயகரமானதாக மாற்றிவிடுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## எல்லையில் மோதல்!

ஜம்மு காஷ்மீரின் கஜோரி மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் பாதுகாப்பு நிலைகளை நோக்கி பாகிஸ்தான் படைகள் பீரங்கித் தாக்குதல் நடத்தியதில் இரண்டு பொது மக்கள் காயமடைந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் நேற்றுக் காலை வரை இருதரப்பிற்கும் துப்பாக்கிச் சண்டை நீடித்ததாகப் இந்திய பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.




காளிப் என்ற பகுதியில் 1180 இறாத்தல் எடையுள்ள பூசணிக்காயை உற்பத்தி செய்து 5,900 டொலர்களை பரிசாக வென்ற ஸ்டீவ் டெலீடஸ் என்பவர் தனது மனைவி, மகன் ஆகியோருடன் மகிழ்ச்சியில் காணப்படுகிறார்.




# லக்கிஸ்ரார் அணி சம்பியனானது!

புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் வருடா வருடம் நடாத்தும் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் நிறைவு பெற்றது.

மின்னொளியில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் அணி 2-1 என்ற கோல் எண்ணிக்கையில் உருத்திரபுரம் அணியைத் தோற்கடித்து வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது.


சிநேகபூர்வ ஆட்டத்தில் கலந்துகொண்ட அணிகள்

இதன் மூலம் தொடர்ந்து இரண்டாவது தடவையாக லக்கிஸ்ரார் அணி சாம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளது.

கடந்த 4ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வந்த இச்சுற்றுப் போட்டியில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்களின் அணிகள் கலந்து கொண்டன.

இதன் முதல் சுற்றுப் போட்டிகள் விலகல் முறையிலும், பின் லீக் முறையிலும் நடத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் அரையிறுதி ஆட்டங்களுக்கு புதுக்குடியிருப்பு சுப்பராங், உருத்திரபுரம், லக்கிஸ்ரார், இரணைப்பாலை சென். அன்ரனீஸ் அணிகள் தெரிவாகின.

அரையிறுதிப் போட்டியில் சுப்பராங் சென்.அன்ரனீஸ் அணிகளைத் தோற்கடித்து உருத்திரபுரம், லக்கிஸ்ரார் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தெரிவாகின.

விறுவிறுப்புடன் ஆரம்பமான இறுதியாட்டத்தில் இரு அணிகளும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரிப்பதற்குக் கடுமையாகப் போட்டியிட்டன.

ஆட்டத்தின் முதல் பாதியில் உருத்திரபுரம் அணி கோல் ஒன்றைப் போட்டு முன்னணியில் திகழ்ந்த போதும் ஆட்டத்தின் இரண்டாவது பாதியில் லக்கிஸ்ரார் அணி ஒரு கோலைப் போட்டு கோல் எண்ணிக்கையை சமநிலைப்படுத்தியது. இந் நிலையில் வெற்றிக்கான கோல் பெறுவதற்கு இரு அணிகளும் கடுமையாகப் போட்டியிட்டன. இறுதியில் ஆட்டம் நிறைவடைய ஒரு நிமிடம் இருக்கும் போது, லக்கிஸ்ரார் அணியின் முன்னணி வீரர் எஸ்.பி.வெற்றிக்கான கோலைப் போட்டு தனது அணியை இரண்டாவது தடவையாக சம்பியனாக வழிசமைத்தார். முன்னதாக உருத்திரபுரம் அணியில் சிவகுமாரும், லக்கிஸ்ரார் அணியில் ரமணனும் கோல்களைப் போட்டனர்.

இது இவ்வாறிருக்க சிறப்புப் போட்டியாக போட்டியை நடாத்திய விக்கினேஸ்வரா அணிக்கும் யாழ். பாசையூர் சென்.அன்ரனீஸ் அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதை பந்தாட்டப்போட்டி இடம் பெற்றது.

இப்போட்டியில் விக்கினேஸ்வரா இரண்டு கோல்களையும், சென். அன்ரனீஸ் மூன்று கோல்களையும் போட்டன.

இது இறுதிப்போட்டியைக் காண வந்த ஆயிரக்கணக்கான உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது.

தமிழர் தாயகப் பகுதியில் விளையாட்டுத்துறையை வளர்த்தெடுக்கும் அயராத முயற்சியின் ஓர் அங்கமாக கழகங்களுக்கிடையில் நடாத்தப்பட்டு வரும் விளையாட்டுப்போட்டிகள் முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே வீரர்கள் வெற்றிக்காக மட்டும் விளையாடப்படும் ஓர் விளையாட்டாக இதனைக் கருதுவது தவறானது. ஒழுக்கமான, சகோதரத்துவ பண்புடைய சிறந்த வீரர்களைக் களத்தில் காண்பதற்கே எமது சமூகம் எதிர்பார்க்கிறது. அதனையே வேண்டியும் நிற்கின்றது.


லக்கிஸ்ரார் அணி


உருத்திரபுர அணி

# நம்பிக்கையே பலம்

கைக்கெட்டியது வாய்க்கெட்டாத நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டியில் வெற்றிபெறுவோம் என்ற கனவும் இந்திய அணிக்குப் பொய்யாகிப் போய்விட்டது.

மொகாலியில் நடைபெற்ற இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சமநிலையில் சமநிலையிலான முடிவை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.


இதனால் நீண்ட நாட்களாக நிறைவேற்றக் காத்திருந்த இந்திய அணியின் ஆசை நிராசையாகப் போயுள்ளது.

இது அணி வீரர்களை நெருக்கடிக்குள்ளாக்குவதுடன் அந்நாட்டு ரசிகர்களையும் கவலைக்குள்ளாக்கியிருக்கும்.

கடந்த ஒரு வருடமாக நியூசிலாந்து அணியை எதிர்கொள்வதற்குச் சிறப்பாகத் தயார்ப்படுத்தப்பட்ட இந்திய அணியால் நியூசிலாந்து அணியை வீழ்த்த முடியாது போனதுடன், அச்சுறுத்தும் அளவுக்குக் கூடப் போட்டி அமையாது போனமையும் மாறாக இந்திய அணியை அச்சுறுத்தும் வகையில் நியூசிலாந்து அணியினர் விளங்கி வருவதும் இந்திய அணி தொடர்பில் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.



முன்னதாக அகமதாபாத்தில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியின் கை ஆரம்பத்தில் ஓங்கியிருந்த போதும், நியூசிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர்களை வீழ்த்துவதில் இந்திய பந்து வீச்சாளர்களால் இயலாமல் போனமை அப்போட்டி வெற்றி தோல்வியுற்ற முடிவைத் தந்தது. இது நியூசிலாந்து அணியினர் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருந்தது.



இந்நம்பிக்கை நியூசிலாந்து அணியை இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிறப்பான ஒரு ஆட்டத்துக்கு வழி வகுத்ததுடன் சாதனைகளை ஏற்படுத்துவதற்கும் ஏதுவாக அமைந்தது. முன்னதாகத் தமது அணி சிறந்த அணியல்ல இருந்தும் திறமையாக விளையாடுவோம் எனக் கூறிய நியூசிலாந்து அணித் தலைவர் பிளெமிங் அணியை வழிநடத்தும் முறை அற்புதமானது. இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 630 ஓட்டங்களைக் குவித்த நியூசிலாந்துக்கு அது சிறந்த ஓட்ட எண்ணிக்கையாக அமைந்தது. இதில் நான்கு வீரர்கள் சதம் அடித்தமை இந்திய ஆடுகளங்கள் தமக்குச் சாதகமானவை என்பதை நிரூபித்ததுடன் அண்மைக் காலத்தில் தெற்காசிய ஆடுகளங்களில் அவர்களின் ஆட்ட திறமை வலுப்பெற்றுள்ளதை நிரூபிக்கின்றது.



அத்துடன் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரே இனிங்ஸில் முதல் மூன்று வீரர்கள் சதம் குவித்தமை ஏழாவது சந்தர்ப்பமாக அமைந்த அதேவேளை இந்தியாவுக்கு எதிராக முதல் மூன்று துடுப்பாட்ட வீரர்கள் சதம் குவித்தமை இதுவே முதல் தடவை.

இதேவேளை, இந்தியாவுக்கு எதிராக நியூசிலாந்து அணி ஒரு இனிங்ஸில் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாக 630 ஓட்டங்கள் பதிவாகியுள்ளது. இதற்கு முன்னர் 1967-1968 கிரிக்கெட் பருவகாலத்தில் கிறேஸ்சேச்சில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து ஒரு இனிங்ஸில் 502 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸை தொடர்ந்தும் ஆடாது இருக்க 431 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் ஆடத் தொடங்கிய இந்திய அணி நியூசிலாந்து பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது. 424 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தொடர்ந்து இரண்டாவது இனிங்ஸை ஆடும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இந்நிலையில் நியூசிலாந்துக்குச் சாதகமாக மாறியுள்ள இரண்டாவது டெஸ்ட் போட்டியைச் சமன் செய்வதற்கு இறுதி நாளான நேற்று இந்தியா கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தது.

## வாரம் ஒரு நட்சத்திரம்...

### பேலே - பிரேசில்

இந்தப் பெயரைத் தெரியாதவர்கள் உலக உதைபந்தாட்டத்தின் அரிச் சுவடியையே தெரியாதவர்கள் எனலாம்.

1968இல் நடைபெற்ற உலகக்கிண்ணப்போட்டியின் போது தனது 17ஆவது வயதில் சாதனை புரிய ஆரம்பித்த உலகின் மிகச்சிறந்த வீரரான பேலேபிரேசிலைச் சேர்ந்த எட்சன். அறன்ரெஸ்டோ நாகிமென்தோ என்ற இயற்பெயர் கொண்டவர்.



1962இல் நடைபெற்ற உலகக் கிண்ணப்போட்டியின் போது காயப்பட்ட பேலே இரண்டு போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலையில் சுவீடனுக்கு எதிரான இறுதிப் போட்டியில் இரண்டு கோல்களைப் போட்டு பிரேசிலின் வெற்றியை உறுதிப்படுத்தினார்.

இப் போட்டியில் மிருகத்தனமாக உதைக்கப்பட்டு போட்டியில் தொடர முடியாமல் பேலே ஆக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பொலிஸ்மா அதிபர் நியமனமும் இழுபறியில்!

சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபர் பதவி கடந்த 14 ஆம் திகதி முதல் வெற்றிடமாக உள்ளது. 26 ஆவது பொலிஸ்மா அதிபராக இருந்த ரி.ஆனந்தராஜா, சிஹல உறுமய போன்ற இனவாத அமைப்புகள் சில தினங்கள் நடத்திய அதிரடித் தாக்குதலுக்குள்ளாகித் தனது 60 ஆவது வயதில் ஓய்வு பெற்ற போது அல்லது ஓய்வுபெற வைக்கப்பட்ட போது பொலிஸ்மா அதிபர் பதவி வெற்றிடமாகியது.



பொலிஸ்மா அதிபர்......?

இவருக்கு அடுத்த நிலையில் ஐந்து பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் பதவியிலிருந்த நிலையில் இவரின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டால் மூவர் பொலிஸ்மா அதிபர் பதவி கிட்டாமலே ஓய்வு பெற வேண்டியிருந்தது. அரசாங்கம் ஒரு மாதத்துக்கு முன் பே சேவை நீடிப்புக்குச் சிபார்சு செய்திருந்த போதும சனாதிபதியின மேசையில் தூங்கிக்கொண்டிருந்த கோப்பு கவனிக்கப்படாததால் உருவாகிய சூழல், சிஹல உறுமயவில் பிரதான பதவி வகிக்கும் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் கடந்த ஆண்டில் ரி.ஆனந்தராஜாவின் நியமனத்தால் பதவி கிட்டாது போனவருமான கொட்டகதெனியவின் அதிரடிப் பிரச்சாரம் இவற்றால் சேவை நீடிப்புக் கிடைக்காது அவர் வெளியேற வேண்டி ஏற்பட்டது.



ரி ஆனந்தராஜா

இப்பொழுது அடுத்த பொலிஸ்மா அதிபர் யார்? என்ற கேள்வி எழுந்துள்ளது. நான்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் இப்போது இப்பதவிக்குப் போட்டியிடுகின்றனர். இவர்கள் ஓய்வுபெறும் வயதில் உள்ளவர்களாய் இருக்கின்றமையால்: இம்முறை பதவி கிட்டாவிட்டால் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியுடனேயே சேவையிலிருந்து வெளியேற வேண்டி ஏற்படலாம். பொலிஸ்மா அதிபர் பதவி கிட்டினால் சேவை நீடிப்புப் பெற வாய்ப்பு உள்ளது.

இவர்களில் இந்திரா டி சில்வா என்பவரின் பெயரை சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சிபார்சு செய்திருந்தார். ஆனால் அதனை அரசியலமைப்புச் சபை நிராகரித்துவிட்டது. இவர் மற்றவர்களுடன் ஒப்பிடுகையில் சேவை மூப்பு அடிப்படையில் தகுதி அற்றவர் என அரசியலமைப்புச் சபை கூறுகிறது.

இது தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குப் பதிலளிக்கையில் இவ்விடயம் குறித்துப் பொலிஸ் ஆணைக்குழுவிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இச் சிபார்சை அரசியலமைப்புச் சபை நிராகரித்த நிலையில் பதில் பொலிஸ்மா அதிபராகத் தான் பொலிஸ்மா அதிபர் பதவிக்குச் சிபார்சு செய்திருந்த இந்திரா டி சில்வாவை சந்திரிகா குமாரதுங்க நியமித்திருக்கிறார்.

இந்த நியமனம் அரசியலமைப்பில் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் செய்யப்பட்டுள்ளதாகச் சனாதிபதி செயலகம் அறிவித்திருக்கிறது. அவ்வாறு பதில் பொலிஸ்மா அதிபர் பதவியுடன் சிறிலங்காவின் பொலிஸ் திணைக்களம் நீடித்து இயங்க முடியாது. எனவே இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை இப்பதவி நீடிப்பைச் செய்ய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முடிவு செய்துள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் விரும்பும் பிரதிப் பொலிஸ்மா அதிபரின் பெயரைச் சிபார்சு செய்ய சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பவில்லை. அவர் கடந்த தேர்தல் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவாக நடந்து கொண்டவர் என்பது சனாதிபதியின் குற்றச்சாட்டாகும்.

17 ஆவது திருத்தச் சட்டப்படி பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கும் அதிகாரம் சனாதிபதிக்கே உண்டு ஆனால் அரசியலமைப்புச் சபையின் சிபார்சுக்கு இணங்கவே பொலிஸ்மா அதிபரை நியமிக்க முடியும். எனவே மீண்டும் ஓர் அரசியல் நெருக்கடியை சிறிலங்கா சந்திக்கவுள்ளது மட்டுமல்லாமல் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஒருவரை நியமிப்பதும் கடினமான ஒரு போட்டியாகவே அமையப் போகின்றது.

ஏற்கனவே இவ்வாறானதொரு நெருக்கடி காரணமாக அதாவது அரசியலமைப்புச் சபைக்கும், சனாதிபதிக்குமுள்ள போட்டி காரணமாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கும், தேர்தல் ஆணைக்குழுவுக்கும் உறுப்பினர்களை நியமிப்பது பெரும் இழுபறி நிலையில் உள்ளது. இதனால் தேர்தல் ஆணையாளர் தான் விரும்பியும் ஓய்வுபெற முடியாத நிலையில் இருக்கிறார். இலஞ்ச ஊழல் ஆணைக்குழு தொடர்பில் அரசாங்கம் சட்டத் திருத்தம் ஒன்றைக் கொண்டுவரும் முயற்சியில் இறங்கியுள்ளது. இப்பொழுது அப்பட்டியலில் பொலிஸ் திணைக்களமும் இடம்பெற்றிருக்கிறது.

எனவே இந்தப் பட்டியல் சீர்செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாததால், பொலிஸ்மா அதிபர் நியமன விடயத்திலும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விரும்பிய ஒருவர் பதவிக்கு ஏற்றுக்கொள்ளப்படும் வரை இது இழுபறி நிலையிலேயே இருக்கும் சாத்தியம் இருக்கின்றது.

தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அல்லது தனக்குச் சாதகமான-வெற்றிச் சூழ்நிலை ஒன்றை ஏற்படுத்துவதற்கு மூன்று பிரிவுகளைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் வேண்டும் என்பது சந்திரிகாவின் அரிச்சுவடி ஆகும். ஒன்று தேர்தல் திணைக்களம், இரண்டு பொலிஸ் திணைக்களம், மூன்றாவது ஊடகத்துறை.

இவற்றில் தேர்தல் திணைக்களம், சுதந்திர தேர்தல் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படாத நிலையில் தேர்தல் ஆணையாளரின் கட்டுப்பாட்டில் இயங்கிவருகிறது. தேர்தல் காலங்களில் அரச நிர்வாகம், பொலிஸ் நிர்வாகம், ஊடகத்துறை என்பவற்றைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரங்களைக் கொண்டு சுதந்திர தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படாத வரை தேர்தல் ஆணையாளரே அதற்கான அதிகாரத்தைக் கொண்டிருக்கிறார். ஆனால் கடந்த பொதுத் தேர்தலின் போது அதனை அவர் பயன்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு உண்டு.

அரச ஊடகத்துறையைக் கைப்பற்ற சந்திரிகாவுக்கு ஆரம்ப காலம் முதலே ஆசையுண்டு. ஆனால் இவ்விடயத்தில் அரசாங்கம் கடைப்பிடிக்கும் இறுக்கமான நடைமுறை அதற்குப் பாதகமாய் இருக்கிறது. பொலிஸ் திணைக்களம் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இல்லாது



அடுத்த பொலிஸ்மா அதிபர் பதவிக்குப் போட்டியிடும் இந்திரா டி சில்வா (இடது) சந்திராபர்ணாண்டோ (வலது)

உள்துறை அமைச்சிடம் இருந்ததால் அதனைக் கட்டுப்படுத்துவது சந்திரிகாவுக்குச் சிரமமாக இருந்தது. எனவே இப்போது கிடைத்துள்ள வாய்ப்பை அவர் கூடிய அளவில் பயன்படுத்தவே முயல்வார்.

ஏற்கனவே இருவேறு அதிகாரங்களுக்குமிடையேயான போட்டி வலுவடைந்துள்ளது. இதில் பெரும்பாலும் நிறைவேற்று அதிகாரமே செயலற்ற நிலையை அடைந்திருக்கிறது. சந்திரிகா குறி வைத்த ஒன்று இப்பொழுது அவர் கைக்குக் கிட்டுவதற்கான சாத்தியம் ஏற்பட்டிருக்கிறது. அவர் விரும்பும் அல்லது கூறும் "மாற்றங்களுக்கு" பொலிஸ் திணைக்களம் அவருக்குத் தேவைப்படுவதால், பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்பான இழுபறியை நீண்ட நாட்களுக்கு எதிர்பார்க்கலாம்.

**வேலவன்**

---

# தனியார் பேருந்தில் பயணித்த இருவர் மொறட்டுவையில் சுட்டுக் கொலை!

(கொழும்பு)

மொறட்டுவப் பகுதியில் இரண்டு நபர்கள் இனம் தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

மொறட்டுவவின் கொறலவல்லப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

தனியார் சொகுசு பேருந்து ஒன்றினுள் இந்தப் படுகொலை நடந்துள்ளதாக மொறட்டுவ உதவி பொலிஸ் அத்தியட்சகர் றொஷான் சில்வா கூறியுள்ளார்.

இந்தத் தனியார் பேருந்து அம்பலங்கொடையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்ததாகக் கூறப்படுவதுடன், துப்பாக்கிப் பிரயோகம் செய்த நபர்களும் இந்தப் பேருந்தில் பயணித்ததாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. (32)

# உந்துருளி உரிமையாளர் கவனத்திற்கு!

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் உள்ள உந்துருளி உரிமையாளர்களுக்கான வீதிப் போக்குவரத்து ஒழுங்கு தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு உந்துருளி பதிவினை காவல் பணிமனையில் மேற்கொண்டவர்களும், பதிவினை மேற்கொள்ளாத அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ காவல் துறையினர் வேண்டியுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்ட காவல்துறை மேற்பார்வையாளர். க.கண்ணாளன் காவல்துறை போக்குவரத்து பிரிவு மேற்பார்வையாளர் கு.கனகலிங்கம் (பிரதம பரிசோதகர்) வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப்பாளர் வின்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (12)

# ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்க அமைச்சரவைக்கு அறிக்கை!

(கொழும்பு)

ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான குழுவின் அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியப் பணிப்பாளர் கூறியுள்ளார்.

இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்குமென எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இந்தக் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்துமாறு ஓய்வூதிய சங்கம் அடிக்கடி கோரிக்கை விடுத்து வருகின்றது.

இந்தக் குழுவின் அறிக்கையின் பிரகாரம், தற்போது மாதம் ஒன்றுக்கு செலவிடப்படும் தொகையைவிட மிகக் கூடுதலாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது மாதம் ஒன்றிற்கு 2600 மில்லியன் ரூபா ஓய்வூதியக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகின்றது.

ஓய்வூதியக் குழுவின் அறிக்கையை அமைச்சரவை ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

# யாழ்.நகரப் பகுதிகளில் சிறிலங்காப் போலிசார் துவிச்சக்கர வண்டிகளில் இரவு ரோந்து நடவடிக்கை

யாழ்.நகரம் எங்கிலும் துவிச்சக்கரவண்டிகளில் பொலிஸ் ரோந்து நடவடிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது கடந்த சனிக்கிழமை இரவு முதல் நடைபெற்றுவரும் இத்திடீர் ரோந்து நடவடிக்கையின் போது ஏறக்குறைய 10வரையான பொலிசார் ஒவ்வொரு குழுக்களாக பிரிந்து இந்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் இதன்போது வீதிகளில் செல்வோர் மறிக்கப்பட்டு தீவிர விசாரணைகள் மற்றும் சோதனைகளிற்கு உள்ளாக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இவ் துவிச்சக்கர வண்டி ரோந்துகள் இரவு வேளைகளில் நடைபெறும் சந்தேக நபர்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தவும் கிளர்ச்சிக்காரர்களின் நடமாட்டத்தை தவிர்ப்பதற்காகவும் இரவு 9.30 தொடக்கம் அதிகாலை வரையும் இரவு வேளைகளில் மட்டும் நடைபெறும் எனவும் யாழ் பொலிசார் தெரிவிக்கின்றனர். (33)

# ஆடை ஏற்றுமதி தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளுடன் ஆராய்வு

(கொழும்பு)

சிறிலங்காவும் அமெரிக்காவும் இருதரப்பு வர்த்தக உறவுகளை மேம்படுத்தவுள்ளது. இதற்கென அமெரிக்காவின் விசேட குழுவொன்று கடந்த வாரம் சிறிலங்கா வந்துள்ளது.

அமெரிக்க வர்த்தக சம்மேளனம் ஆடை தயாரிப்பு, கைத்தொழில் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

அமெரிக்கக் குழுவினர் சிறிலங்காவின் மிகப் பெரிய ஆடை தயாரிப்பு நிலையமான பன்னல,சின்லைட் காமன்ட் தொழிற்சாலைக்கு விஜயம் மேற்கொண்டனர்.

சிறிலங்காவுக்கு அளிக்கப்படும் ஆடை ஏற்றுமதிக் கோட்டா 2005 இல் காலாவதியான பின்னர் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை பற்றி இருதரப்பும் விரிவாக ஆராய்ந்துள்ளது.

# கிளி.பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர காணி அனுமதிப் பத்திரம்

(அலுவலக செய்தியாளர்)

மாகாண காணி ஆணையாளரின் பணிப்புரையின் பெயரில் தற்போது கிளிநொச்சி பிரதேச செயலர் பிரிவில் நிரந்தரகாணி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது.

இது குறித்து கிளி/கரைச்சிப் பிரதேச செயலக காணி உத்தியோகஸ்தர் செ.சிறீரங்கநாதனுடன் எமது செய்தியாளர் தொடர்பு கொண்டபொழுது தெரிவிக்கையில்;

பல வருட காலத்திற்குப் பின்பு மாகாண காணி ஆணையாளரின் விதப்புரைக்கமைவாக தற்போது கிளிநொச்சி,சாந்தபுரம் கிராமத்தில் 1992ஆம் ஆண்டு முதல் குடியிருக்கும் காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதன் முதற் கட்டமாக கடந்த வாரம் கரைச்சிப் பிரதேச செயலகத்தில் வைத்து சாந்தபுரம் கிராமத்தைச் சேர்ந்த 40 காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி கிராமத்தைச் சேர்ந்த 57 காணி உரிமையாளர்களுக்கு நிரந்தர அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ஓரிரு வாரங்களில் இவர்களுக்கு நிரந்தர அனுமதிப் பத்திரம் வழங்கப்படவுள்ளதெனவும்,

தொடர்ந்து கிளி/கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 42 கிராம சேவை அலுவலர் பிரிவுகளடங்கலாக நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் பெறத் தவறியவர்களுக்கு நிரந்தர காணி அனுமதிப்பத்திரம் (எல்டி.ஓ. பொமிற்) வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (சோ)

# உள்நாட்டலுவல்கள்,மாகாணசபைகள்,உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு-கிழக்கு மாகாண சபை.
# வடக்கு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம்(நிகொட்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## "ஆஅவ"கடன் இல.1846-SRI(SF)

# கேள்வி கோரல்-இல.07

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. வடக்கு,கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் (NECORD) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ("ADB") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02.இதன் பின்னகத்து தொழில் தருனராகக் குறிப்பிடப்படும் NECORD, கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக வவுனியா மாவட்ட கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல. | ஒப்பந்த இனங்காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்டாட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | VA/NECORD/ED/13 | மன்னகுளம் அ.த.க.பாடசாலையில் 110'x25' வகுப்பறைக் கட்டடம் நிர்மாணம். | M8 | 15,000.00 |
| 02 | VA/NECORD/ED/13 | செட்டிகுளம் மாவட்ட வைத்தியசாலை, சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மிருக வைத்திய அதிகாரி அலுவலகம் ஆகியவற்றிற்கு நீர் விநியோகிப்பதற்காக, நீர்ப்பம்பி அறை அமைத்தல் மற்றும் நீர் வழங்கல் குழாய்களை அமைத்தல். | M9 | 6,000.00 |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களின் கூறுவிலையிடல் ஏற்றுக்கொள்ளப்படும்.

i. நிருமாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு,தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii. கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்டவேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக் காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

iii. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

iv. மோசடியான,அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு , அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

v. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04. பந்தி 2இல் உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தக்காரர்கள் கேள்வி கோர முடியும். ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதி வாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, வவுனியாவில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி:- 024-2222589, பக்ஸ்:- 024-2222590, ஈ மெயில்:- necordva @sltnet.lk.

06.ஒப்பந்த ஆவணங்களை அக்டோபர் 20இலிருந்து நவம்பர் 04,2003 வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, ரூபா 1000/= மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு மீது கொள்வனவு செய்யப்படலாம்.

07. முன் கூட்டிய கேள்வி கோரல் கூட்டமொன்று மேற்படி அலுவலகத்தில் ஒக்டோபர் 31 ஆம் திகதி முற்பகல் 10.00 க்கு நடைபெறும்.

08. கேள்வி கோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணமும்,விலையிடப்பட்ட கேள்விகளினதும் இரண்டு பிரதிகளும் பொறிவைக்கப்பட்ட தனித்தனி உறைகளில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

09. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்ட கேள்விச்சபை NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம், கச்சேரி, வவுனியாவிற்கு நவம்பர் 10 ,2003 பிற்பகல் 3.00க்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10. கேள்விகள் தயாரிப்பினால் அல்லது ஒப்படைப்பினால் கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகு செலவுகளுக்கு, அல்லது செலவினங்களுக்குத் தொழில் தருனர் பொறுப்பாக மாட்டார்.

க.கணேஷ்,
தலைவர்,மாவட்ட கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்,
வவுனியா மாவட்டம்.

(சி-8300)

# தேர்தலை நடத்த சனாதிபதி தீர்மானம்; பரவிய வதந்திகளில் உண்மை இருக்கலாம்!

## -பொ.ஐ.மு. பொதுச் செயலர் கருத்து

(கொழும்பு)

**சனாதிபதி சந்திரிகா புதிதாகத் தேர்தலை நடத்துவதற்கு எண்ணியுள்ளார் எனப் பரவியுள்ள வதந்திகளில் ஓரளவு உண்மை இருக்கலாமென பொ.ஐ.முன்னணியின் பொதுச் செயலாளர் ரி.எம். ஜெயரட்ண கூறியுள்ளார்.**

அவர் சன்டே லீடர் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் அத்தகைய தீர்மானங்கள் பற்றிக் கட்சிக்கு அறிவிக்கவில்லையென சனாதிபதி மேலும் கூறியுள்ளார்


சனாதிபதி பொ.ஐ.முன்னணி அதிகாரிகளுக்குக் கட்சியை மாவட்ட ரீதியாக மறு சீரமைக்குமாறு கூறியுள்ளார். கட்சியை மறு சீரமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்படுகிறது. எந்த நேரத்திலும் பொஜமுன்னணி தேர்தல் ஒன்றை எதிர்நோக்குவதற்குத் தயார் என அவர் மேலும் கூறியுள்ளார்.

ஐ.தே.முன்னணி அரசை தோல்வியடையச் செய்வதற்குத் தற்போது நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஜே.வி.பியுடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டு சேர்வதில் ஏற்பட்ட தோல்விகளுக்கு ஆரம்பத்திலிருந்தே எவையும் சரியாக நடைபெறவில்லையெனக் கூறியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி சகல இன மக்களினதும், மதங்களினதும் தேவைகளுக்காகச் செயற்படுகிறது என்ற காரணத்தினால் ஜே.வி.பியுடன் எதிர்காலத்தில் கூட்டுச் சேர்வது பற்றி ஆராய முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்து

யாழ்/திருநெல்வேலி சந்திக்கு அண்மையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பேருந்துதுவிச்சக்கர வண்டி விபத்தில் துவிச்சக்கரவண்டியில் வந்தவரான திருநெல்வேலியைச் சேர்ந்த கே.கமலசொரூபன் (வயது27) என்பவர் பலத்த காயங்களுக்குள்ளானார். இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# இருமாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம்



(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இந்து ஆரம்ப பாடசாலையில் இரண்டு மாடிக்கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று நண்பகல் 12 மணிக்கு பாடசாலை முதல்வர் உமா சங்கர் தலைமையில் நடைபெற்றது.

கிளி.வலயப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் நிகழ்வில் கலந்துகொண்டு 110'x25' அடி நீள,அகல இரண்டு மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல்லினை நாட்டிவைத்தார்.

தமிழீழ வங்கிகல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம், கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.சிற்றம்பலம், சிவநகர் பாடசாலை அதிபர் மனோகரன், ஜெயந்திநகர் கி.அ.சங்கத் தலைவர் நடராசன் (ஜே.பி) பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலர் ச.சந்திரசேகரன் மற்றும் பொதுமக்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.(சோ)

## -விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில்-

# அரசினர் வைத்தியசாலை முன் அமைந்துள்ள ஆலயத்தை உடன் அகற்ற நடவடிக்கை!

(அலுவலக செய்தியாளர்)

தருமபுரம் அரசினர் வைத்தியசாலைக்கு முன்பாக அமைந்துள்ள ஆலயத்தினை அகற்ற உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்தவாரம் கிளி. அரசசெயலகத்தில் நடைபெற்ற அத்தியாவசிய சேவைகள் கூட்டத்தில் வைத்து அவைத்தலைவரும் கிளி.மாவட்ட அரச அதிபருமாகிய தி.இராசநாயகம், கிளிமாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தியிடம் மேற்படி பணிப்புரையினை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; தருமபுரம் பிரதான வீதிக்கருகாமையில் மேற்படி ஆலயம் அமைந்துள்ளதன் காரணத்தினால் வீதி விபத்துக்கள் ஏற்பட வாய்ப்பேற்பட்டுள்ளதுடன் பல மானிட உயிர்களை அநியாயமாக காவு கொள்வதற்கு வாய்ப்பாகியுள்ளதெனவும் இவ்விடயத்தில் கிளி.மாவட்ட மா.சு.சே.பணிப்பாளர் தலையிட்டு அவ்விடத்திலிருந்து ஆலயத்தினை அகற்ற உடன் நடவடிக்கை மேற்கொள்ளும் வண்ணம் கிளி. அரச அதிபர் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# பாதாள உலகத்தவர் கைது!

பிரபல பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவரை பொலிஸ்மா அதிபரின் விசேட குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவரிடமிருந்து துப்பாக்கி மற்றும் ரவைகள் பல இருந்ததாக அவர்கள் கூறியுள்ளனர். பாதுக்கை ரயில் நிலையத்தில் வைத்து இவரைக் கைது செய்ததாக குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

# களவாடப்பட்ட தாலிக்கொடி காவல்துறையினரால் மீட்பு!

(வட்டக்கச்சி)

ஹைஏஸ் வாகனத்தில் பயணம் செய்தவேளை களவாடப்பட்ட தாலிக்கொடி தமிழீழ காவல்துறையினரின் நடவடிக்கைகளால் மீட்கப்பட்டது.

வெளிநாட்டிலிருந்து உறவினர்களிடம் மேற்படி வாகனத்தில் வருகை தந்த வட்டக்கச்சியைச் சேர்ந்த பெண்ணின் தாலிக்கொடி வாகனத்துள்ளே தவறவிடப்பட்டது. கடந்த 08ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தைச் தொடர்ந்து வட்டக்கச்சிப் பிரதேச காவல்துறையினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இது தொடர்பாக விசாரணை மேற்கொண்ட காவல்துறையினர் பத்து வயது சிறுமியின் தகவலையடுத்து வாகனத்தில் பயணித்த கல்மடு நகரைச் சேர்ந்த சந்தேக நபர் விசாரிக்கப்பட்டதன் பேரில் பதின்மூன்றரைப்பவுண் தாலிக்கொடி மீட்கப்பட்டு கடந்த 17ஆம் திகதி உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

விசாரணைக்கு உதவிய சிறுமிக்கு இரண்டு பவுண் தங்கச் சங்கிலி மேற்படி பெண்ணால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. (12)

# கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பேரவை அங்குரார்ப்பணமும் நிர்வாகத் தெரிவும்

கிளிநொச்சி மாவட்ட கல்விப் பேரவை அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த சனிக்கிழமை கிளி. வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கருத்துரைகளை கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன், கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்டர் ஆகியோர் நிகழ்த்தினர். இதில் கல்வி அபிவிருத்திக்குழு, விளையாட்டுக்குழு, மொழி கலைத்திறன் குழு, நிதிக்குழு, தேர்வுக்குழு போன்ற ஐந்து குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாணவர் கல்வி அபிவிருத்தி, ஆசிரியர் வாண்மை விருத்தி, பௌதீக வள உச்சப்பயன்பாடு ஆகிய மூன்று நோக்கங்களைக் கொண்ட இப்பேரவையின் தலைவராக கியூடெக் நிறுவன இணைப்பாளர் சி. கணேசபிள்ளை, உப தலைவராக கிளி. வலயக்கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், செயலாளராக கனகாம்பிகைக்குள அ.த.க.பாடசாலைஆசிரியர் தி.அபராஜிதன், உப செயலாளராக, நல்லூர் மகா வித்தியாலய அதிபர் நா. கணேஸ்வரநாதன் பொருளாளராக முருகானந்த மகாவித்தியாலய ஆசிரியர் சி. விக்கின ராஜா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் இம்மாவட்ட கல்விப் பேரவையின் நிர்வாக உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப்பேரவையின் பதவி வழியாக அரச அதிபர் போசகராக இருப்பதுடன் இப்பேரவையை அரச சார்பற்ற நிறுவன அமைப்பில் பதிவு செய்து செயற்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுனர் சங்கக் கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட மெய்வல்லுனர்சங்கப் பொதுக்கூட்டம் 2003/2004,எதிர்வரும் 9.11.2003 அன்று காலை பத்துமணிக்கு கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மேற்படி சங்கத்தில் பதிவு செய்யவிரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 31.10.2003ற்கு முன்பதாக மெய்வல்லுனர் சங்க செயலர், சு.கனகராசா மாவட்ட செயலகம் கிளிநொச்சி எனும் முகவரியில் தொடர்பு கொள்ளும் வண்ணம் கிளி. மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் வேண்டியுள்ளார். (சோ)

# புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் வவுனியாவில் சந்திப்பு

புலிகளுக்கும்- முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.

பட்டாணிச்சூர் முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது. இச்சந்திப்பில் புலிகள் சார்பான வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டனர். இதன் போது இரு தரப்பினருக்குமிடையிலான நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பாக ஆராயப்பட்டதாகவும், இவ்வாறான சந்திப்புக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமென எழிலன் கூறியுள்ளார்.

# கிரிக்கெட் சபைத் தலைவரை பாதுகாக்க தீவிர முயற்சி

(கொழும்பு)

பணத்திற்கு கொலை புரியும் தம்மிக அமரசிங்கவுடன் சிறிலங்கா கிரிக்கெட் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலாவுக்கு தொடர்புள்ளதாக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டிலிருந்து தப்பவைக்கும் நோக்கில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பத்திரிகையான "தினகர" வுக்கு ஹட்சன் சமரசிங்கவும், மர்வின் சில்வா எம்.பியும் அழுத்தம் கொடுப்பதாகத் தெரியவருகிறது.

திலங்க சுமதிபாலாவை பாதுகாப்பு நடவடிக்கைக்கு தினகர ஆசிரிய பீடத்துக்குள் எதிர்ப்பு இருப்பினும் அதன் முகாமைத்துவத்தின் அழுத்தங்களால் ஆசிரிய பீடம் செய்வதறியாத நிலையிலுள்ளது.

இது தொடர்பாக ஹட்சன் சமரசிங்கவிடம் கேட்டபோது திலங்க சுமதுபால கறுப்போ,சிவப்போ என்பது கூட தமக்குத் தெரியாது எனவும் இவ்வாறான நபர்களைப்பாதுகாக்கும் நோக்கம்தமதுபத்திரிகைக்குக் கிடையாது எனவும் தெரிவித்துள்ளார்.

பௌத்தர்களை தாக்குவது சண்டேலீடர் பத்திரிகைக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள இயற்கைக் குணம் எனவும் தமது பத்திரிகை ஆசிரிய பீடத்துக்கு எந்த அழுத்தமும் தரவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரச ஊழியர்களின் வேலை நேர கட்டுப்பாடுகளை நீக்க நடவடிக்கை!

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரகட்டுப்பாடுகள் நீக்கப்பட இருப்பதாக பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதன்படி ஊழியர்கள் தமது பணிகளுக்கு சமுகமளிப்பது மற்றும் பணி முடிந்து செல்வது என்பவற்றின் போது நேரக் கட்டுப்பாடுகள் கவனிக்கப்படமாட்டாது.

இந்த நிலையில் ஊழியர் ஒருவர் தமக்கு திணைக்கள அதிகாரி வழங்கும் பணியை உரிய முறையில் முடித்துக் கொடுத்தால் அவர் வீடு திரும்ப முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது

மேலதிக வேலை நேரக் கொடுப்பனவை ரத்துச் செய்யவும் இந்த முயற்சி முதன் முறையாகப் பொது நிர்வாக அமைச்சின் கீழ்வரும் திணைக்களங்களில் பரீட்சாத்தமாகி அமுல் செய்யப்படுகிறது. (32)

# அம்பாந்தோட்டையில் கூட்டங்களுக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஏற்பாடு

(கொழும்பு)

ஐ.தே.கட்சி அம்பாந்தோட்டை மாவட்டத்தில் விசேட பொதுக் கூட்டங்களையும், விசேட நிகழ்வுகளையும் நடத்தவுள்ளது.

எதிர்வரும் 24, 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள இக்கூட்டங்களில் சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உட்பட அமைச்சர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சமாதான முயற்சிகள் குறித்தும் பொருளாதார விடயங்கள் குறித்தும் மக்களுக்கு எடுத்துவிளக்கும் முகமாகவே இக் கூட்டங்கள் இடம் பெறவுள்ளன.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சமாதானத்திற்கு எதிராக மேற்கொண்டு வரும் பிரச்சார நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையிலேயே இக்கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

# அரசியல்வாதி மீது நடவடிக்கை; மாவட்ட செயலர் இடமாற்றம்!

ஐக்கிய தேசிய முன்னணியின் புத்தளம் மாவட்ட எம்.பி ரங்க பண்டாரவினால் புத்தளம் வனவிலங்குபாதுகாப்பு சரணாலயத்தில் பல ஆயிரம் ரூபா பெறுமதியான தேக்க மரங்களும் யூக்லிப்ஸ் மரங்களும் திருட்டுத்தனமாக வெட்டியது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்ததன் காரணமாக அம்மாவட்டச் செயலாளர் (அரச அதிபர்) ஜயலத்ரவி திசா நாயக்க அரசியல் பழிவாங்கல் மூலம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

விசாரணைகளின் போது எம்பியான ரங்கபண்டார இளைஞர் அமைப்பு ஒன்றுக்காக 7 தேக்க மரங்கள் மட்டுமே வெட்டியதாகத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நீர்ப்பாசன வனவளப்பாதுகாப்பு திணைக்களத்தின் விசாரணைகளின் போது அனுமதியளிக்கப்பட்டதற்கு மேலாக மரங்கள் வெட்டியளிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதனை வெளியிட்ட அரச அதிபர் தெரிவித்ததாவது; சட்டவிரோதமாக வெட்டப்பட்ட மரங்களைத் தாம் கைப்பற்றியதாகவும் எம்பி ரங்கபண்டார அதனை விடுவிக்கக் கோரிய போது தாம் மறுத்த நிலையில் தமக்கு இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

# தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படாமை எதிர்காலத்தில் பிரச்சினைகளை தோற்றுவிக்கும்

## அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசியலமைப்புக்குழுவினரால் சனாதிபதியிடம் தேர்தல் ஆணைக் குழுவுக்கான பெயர்களை அறிவித்தாலும் இதுவரை சனாதிபதியால் தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப் படாமல் இருப்பது எதிர்வரும் தேர்தல்களில் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தற்போது பதவியிலிருக்கும் தேர்தல் ஆணையாளர் சுகயீனம் காரணமாக ஓய்வில் செல்ல உயர் நீதிமன்றத்தில் அனுமதிகோரினாலும் 17வது அரசியல் திருத்தச் சட்டப் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படுமுன் தேர்தல் ஆணையாளர் ஒருவரை நியமிக்க முடியாது. இதனால் அவின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு ஓய்வில் செல்ல வேண்டிய நேரத்தில் மீண்டும் அவரையே ஆணையாளராக நியமிக்க வேண்டிய நிலையில் சனாதிபதி இருப்பதாக பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# புலிகளின்குரல் வானொலிமன்ற முத்தமிழ் கலையரங்கம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை புலிகளின் குரல் வட்டக்கச்சிப் பிரதேச வானொலி மன்றத்தின் முத்தமிழ்க் கலையரங்கம் சிறப்புற நடைபெற்றது.

வட்டக்கச்சிப் பிரதேச வானொலி மன்றத் தலைவரும் இராமநாதபுரம் மகாவித்தியாலய அதிபருமான இரத்தினகுமார் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது. வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமான நிகழ்வில் அறிமுகஉரை, சிறப்புரைகள் என்பன நடைபெற்றது. சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி நிகழ்த்தினார்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் கவிதா நிகழ்வும் வாத்திய விருந்தா நிகழ்வும் சிறப்பு நிகழ்வாக புலிகளின் குரல் கலைஞர்களின் "உன்னைப் பார்த்தபின் நான்" கவியரங்கம் பொன் காந்தன் தலைமையில் நடைபெற்றது. சிறந்த நிகழ்ச்சிகளை வழங்கிய கலைஞர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (12)

# இன்று மீண்டும் வேலை நிறுத்தம்

(கொழும்பு)

சிறிலங்காவின் புகையிரதத் திணைக்கள ஊழியர்கள் மீண்டும் இன்று வேலை நிறுத்தப்போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

இப்போராட்டத்திற்கு தனியார் தொழில் நிறுவனங்கள் தொழிற் சங்கங்கள் என்பனவும் ஆதரவு தெரிவித்துள்ளன. இந்த வகையில் 10 இற்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் ஆதரவு தெரிவித்துள் ளன.

சம்பள உயர்வு உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

## பிழை திருத்தம்

கடந்த 16.10.2003 அன்று 2ஆம் பக்கத்தில் வெளியான வவுனிக்குளம் அணைக்கட்டில் பாரஊர்திகள்... என்ற தலைப்பில் வெளியான செய்தியில் பொறியியலாளரின் பெயர் தவறாக இடம்பெற்றுள்ளது. நீர்ப்பாசன பொறியியலாளர் பா.கணநாதன் என்பதே சரியானதாகும்.


# கணினிப் பயிற்சி நெறி விண்ணப்பம் கோரல்

தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில் தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பு நடாத்தும் கணினிப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பயிற்சி நெறி – MS OFFICE

இடம் – கிளி/இராமநாதபுரம் ம.வி. ,வட்டக்கச்சி.

23.10.2003 காலை 10.00 மணிக்கு சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடனும் தேவையான ஆவணங்களுடனும் நேர்முகத்தேர்வுக்கு சமுகம் தரவும்.

(3113) தமிழீழ மாணவர் அமைப்பு




தமிழீழ மாணவர் அமைப்பின் ஆதரவில்
தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பின்
முள்ளியவளை கணினிப் பயிற்சி நிலையத்தினர்
நடாத்தும்

# கணினிக் கண்காட்சி

## 22 - 10 - 2003

கணினிக் கண்காட்சி




தமிழீழ மாணவர் அமைப்பு (3111)



## நினைவில் நீங்கா மூன்றாம் ஆண்டு

ஈன்றவள் மடியில்
25
07
1975



ஈழத்தாய் மடியில்
21
10
2000

### கப்டன் மலரவன்/வேலவன்/ முத்தையா
### (இரத்தினசிங்கம் நாதரூபன்)

ஆண்டுகள் மூன்று மறைந்தாலும்
மலரவா எங்கள் வேலவா!
மறப்போமா உன் பூ முகத்தை
நம் வாழ்நாளில்.

மாவீரர் வேலவனின் மூன்றாம் ஆண்டு நினைவு வீரவணக்க நிகழ்வு முத்தையன் கட்டு புனித பூமி சிறுவர் கல்வி நலன் காப்பகத்தில் 21.10.2003 இன்று நிகழும் என்பதை அறிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்,
புனிதபூமி சிறுவர்கள்,
போராளிகள், ஆசிரியர்கள்,
நிர்வாகிகள்.

(3109)



# நீங்காத நினைவில்

## 16ஆம் ஆண்டில்



தாயின் மடியில் - 04.01.1959
தாயக மண்ணில் - 21.10.1987

மூத்த உறுப்பினர்
### லெப்.கேணல் சந்தோசம் மாஸ்ரர்
(கணபதிப்பிள்ளை உமைநேசன்)

முன்னாள் திருமலை மாவட்டத்தளபதி
பல்கலைக்கழகம் சென்று விஞ்ஞானபீடம் ஏறி
விடுதலைக்காக எழுந்த புலி நீ
தலைவரோடொன்றி திருநெல்வேலி சமரில் நின்றாய்
திருமலை சென்று பகை வென்ற தளபதி
எம் திசை வந்த அந்நியரை திகை கொள்ளவைத்த தீரன்
உயிர் ஈந்து பதினாறு ஆண்டுகள் ஆகினும் உன்பாதச்
சுவடுகளைப் பற்றி
எழும் உன் சந்ததி.

## முதலாம் ஆண்டில்



தாய்ப்பற்றுள்ளவராய்-01.11.1927
தாயகப்பற்றாளராய் - 22.02.2002

நாட்டுப்பற்றாளர் அமரர் உயர்திரு
### பண்டிதர் ப.கணபதிப்பிள்ளை
(அரியாலை, யாழ்ப்பாணம்)

இறந்தும் இறவாப் புகழுடன் திகழும்
இணையிலாத் தந்தையே
சிறப்புச் செய்தீர்கள் செந்தமிழுக்கு
அறத்தின் வழியில் நின்று அனைவருக்கும்
ஆயகலைகள் உரைத்தீர்கள்.
மறந்து தமிழர்வாழா மண்ணின்
மானம் காத்திட நன்மக்களை உவந்தீர்கள்
திறம்பட உழைத்து தேசம் விடிந்திடக்
காட்டிய உறுதியால் நாட்டுப்பற்றாளராகினீர்
உறங்க மறுக்கும் உள்ளத்தில் உங்கள்
நினைவுகளைச் சுமந்து நிற்கிறோம் நாங்கள்.

(3850) குடும்பத்தினர்.



## சிந்தனைக்கு

உலக வரலாற்றில் எங்கும், எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும், அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-10-2003

# மக்கள் பலத்தை நிரூபிக்க...!

எதிர்வரும் 24ஆம் திகதி அரசிற்கெதிரான மாபெரும் பேரணி ஒன்றை சிறிலங்காவின் தலைநகரில் நடத்துவதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அக்கட்சி இப்பேரணியில் 10 இலட்சம் பேரை அணி திரட்டுவது எனத் தீர்மானித்துள்ளது. இதன் மூலம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அதிகாரப் பலத்துடன் மட்டுமல்ல, மக்கள் பலத்துடனும் உள்ளார் என்பதை வெளிக்காட்டுவதே அக்கட்சியின் நோக்கமாகும்.

ஒரு வகையில் பார்த்தால் சனாதிபதி சந்திரிகா எதிர்காலத்தில் மேற்கொள்வார் என எதிர்பார்க்கும் அதிரடி அரசியல் நடவடிக்கைக்கு முன்னால் அவர் தம் பலம் அறியும் ஒரு நடவடிக்கைகளாகவும்கூட இருக்கலாம். ஏனெனில், தம் பலம் அறியாது நடவடிக்கைகளை மேற்கொள்வதானது முதலுக்கே மோசத்தை ஏற்படுத்தக் கூடிய வியாபாரம் போன்றதே ஆகும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இப்பேரணி வெற்றி பெறுமானால் – குறைந்தது ஐந்து இலட்சம் மக்களாவது அணி திரள்வார்களேயானால் – சிறிலங்கா அரசியலில் அதிரடி நடவடிக்கைகளை விரைவிலேயே எதிர்பார்க்கலாம். ஏற்கனவே புத்தாண்டுக்குள் ஆட்சி மாற்றம் ஒன்றை எதிர்பார்க்கலாம் எனச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். இந்நிலையில், பேரணி வெற்றி பெறுமானால், அவரின் கூற்றுக்கள் உறுதிப்படுத்தப்பட்டதாகவே இருக்கும்.

இப்பேரணி வெற்றி பெறுமானால், ஆட்சி மாற்றம் அதாவது, ஆட்சிக் கவிழ்ப்பு என்பது எதிர்பார்க்கக் கூடியதொன்றாகவே இருக்கும். அதாவது, சனாதிபதி சந்திரிகாவிற்கு மக்கள் பலம் தம் பக்கம் உள்ளது என அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளை முனைப்புடன் மேற்கொள்வதற்கான அங்கீகாரம் கிடைத்தது போன்றதாகிவிடும். இது ரணில் அரசாங்கத்திற்கு மட்டுமல்ல நாட்டிற்கும் கேடு விளைவிப்பதாகவே இருக்கும்.

ஆகையினால், 24ஆம் திகதி சுதந்திரக்கட்சி நடத்தவுள்ள பேரணியானது அரசியல் ரீதியில் மிகவும் முக்கியம் வாய்ந்ததொன்றாகவே இருக்கும். வேறு விதமாகக் கூறினால், ஆட்சிக் கவிழ்ப்பை நியாயப்படுத்திக் காட்டுவதற்கு சுதந்திரக் கட்சி மேற்கொள்ளும் நடவடிக்கை என்று கூடக் கூறலாம்.

, ஆனால், சுதந்திரக் கட்சி எதிர்பார்க்கும் மக்கள் கூட்டம் இப்பேரணியில் திரளுமா என்பது சந்தேகத்திற்குரியதொன்றே. அதிலும் குறிப்பாக, சுதந்திரக் கட்சியுடன் அரசியற் கூட்டு வைத்துக் கொண்டுள்ள இடதுசாரிகள் மற்றும் இரண்டாவது பெரிய எதிர்க் கட்சியான ஜே.வி.பி. என்பன சுதந்திரக் கட்சியின் இப்பேரணிக்கு ஆதரவு வழங்கத் தயாராக இல்லை.

இதன் காரணமாக எதிர்பார்ப்பிற்கு இணங்க மக்களை அணி திரட்டுதல் என்பது கடினமானதாக இருக்கும். ஆகையினால், இதனை வெற்றி கொள்ள சுதந்திரக்கட்சிக்குரிய ஒரே வழி தீவிர இனவாதப் பிரச்சாரமாகவே இருக்க முடியும். ஏற்கனவே, சுதந்திரக் கட்சி இனவாதப் போக்கை வெளிக்காட்டுவதாக இருந்தாலும் அதனைவிட மேலும் தீவிரமான முறையில் இனவாதப் பிரச்சாரத்தை மேற்கொள்ளுதல் அவசியமானதாக இருக்கும்.

ஆகையினால், சிங்கள மக்கள்தான் இதனைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக உள்ளனர். பேரணியில் அணியணியாக மக்கள் திரளுவார்களேயானால் அது ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் திரண்டுள்ளனர் என்பது மட்டுமல்ல, ரணில் அரசாங்கம் மேற்கொள்ளும் சமாதான முயற்சிகளுக்கும் எதிரானதாகவே அது இருக்கும்.

ஆகையினால், இப்பேரணியில் சிங்கள மக்கள் பங்கேற்றல் / திரளுதல் என்பது குறித்து நன்கு சிந்தித்தே முடிவிற்கு வருதல் நாட்டிற்கு நல்லதாக இருக்கும். ஏனெனில், இப்பேரணியில் பங்கேற்பதன் மூலம் நாட்டில் யுத்தத்திற்கு ஆதரவாக அணி திரள்வதாகவே அர்த்தப்படும். அது மட்டுமல்ல, நாட்டைப் பேரழிவு நோக்கி இட்டுச் செல்வதாகவும் இருக்கும். அத்தோடு, சனாதிபதி சந்திரிகா தனது அதிகார அபிலாசைகளுக்கான ஆட்சிக் கவிழ்ப்பை நியாயப்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதாகிவிடும்.

இதேவேளை, சனாதிபதி சந்திரிகாவின் இப்பேரணி தோல்வியுறுமானால், – ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் கவிழ்க்கப்படும் அபாயத்தில் இருந்து மீண்டுவிட்டதாக அர்த்தம் கொண்டுவிட முடியாது. சிலவேளைகளில் இக்கவிழ்ப்பு சிறிது காலத்திற்குப் பிற்போடப்படலாம். ஆனால், ஒன்று பேரணி தோல்வியுறுமானால், சனாதிபதி சந்திரிகாவிடம் அதிகார பலம் மட்டுமே உண்டு என்பது உறுதியாகிவிடும். இதன் பின்னான அவரது அனைத்து நடவடிக்கைகளும் முற்றிலும் அதிகாரத்திற்கானதே என்பது வெளிச்சமாகிவிடும்.

# மக்களுக்கு வழங்கிய உறுதி மொழிகளை நியாயமாக நிறைவேற்ற செயற்படுகிறேன்

## சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

மக்களுக்கு உறுதி வழங்கப்பட்டவாறு அவற்றை நியாயமாக நிறைவேற்றும் பொருட்டு, நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுவதாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

சனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே சனாதிபதி இவ்வாறு கூறியுள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு கிராமங்களில் வாழும் மக்களுக்கு அரசு நிதி ஒதுக்காத நிலையில் சனாதிபதி நிதியிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டு அவர்களது எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படுவதற்கு உதவி வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

மாகாண சபைகளுக்காக அரசு ஒதுக்கிவந்த நிதிகள் தற்போது பெருமளவு குறைந்துவிட்டதாகவும் சுட்டிக்காட்டிய சனாதிபதி 1994இல் தனது அரசு முதல் தடவையாக சமாதான முயற்சிகளை ஆரம்பித்தபோதிலும், எட்டு மாதங்களின் பின்னர் விடுதலைப் புலிகள் அதனை நிராகரித்து யுத்தத்தில் ஈடுபட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

# வேலையற்ற 10,000 பட்டதாரிகளுக்கு நான்கு மாத காலத்தில் வேலை வாய்ப்பு

## அமைச்சர் சமரசிங்க கூறுகின்றார்

(கொழும்பு)

வேலை வாய்ப்பற்றிருக்கும் 10,000 பட்டதாரிகளுக்கு அடுத்த நான்கு மாத காலத்தினுள் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் சமரசிங்க கூறியுள்ளார்.

இவர்களுள் 5000 பேருக்கு இவ்வாண்டு வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாகவும், ஏனைய 5000 பேருக்கு அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தினுள் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

களுத்துறை மாவட்டத்திலுள்ள பட்டதாரிகளைப் பற்றி அரசு அதிக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் அகலமத்த பொத்தோமலவில் கணினிப் பயிற்சி நெறியை நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துப் பேசியபோதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அதேநேரம் அதிக ஆங்கில அறிவு பெற்றிருப்பவர்களுக்கு அரசே முன்நின்று வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

# வைத்தியசாலை ஆய்வு கூடங்களை புனரமைக்க அமைச்சு நடவடிக்கை

நாட்டிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலுமுள்ள ஆய்வு கூடங்கள் புனரமைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இதன் முதல் கட்டமாக அரச, தனியார் வைத்தியசாலைகளின் ஆய்வு கூடங்கள் தொடர்பான மதிப்பீடுகள் பெற்றுக்கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் அஜித் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

மீளமைக்கப்படும் வைத்தியசாலை ஆய்வு கூடங்கள் அது முடிந்த பின்னர் உலக சுகாதார நிறுவனத்தின் அனுமதிச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளவுள்ளது. வைத்தியசாலை ஆய்வுகூடப் புனரமைப்பை கண்காணிப்பதற்கென்று தேசிய தொழில்நுட்பக் குழுவொன்று நியமிக்கப்படவுள்ளது.

# சிறிலங்கா ஊர்காவல் படையினரை பயிற்றுவிக்க புதிய முகாம் அமைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா ஊர்காவல் படையினருக்கான பயிற்சி முகாமொன்று களுத்துறை பேருவித்தவில் அமைக்கப்படவுள்ளது.

அங்கு மூடப்பட்டுள்ள பேருவித்த கனிஷ்ட பாடசாலை வளாகத்தைப் பயிற்சி முகாம் அமைப்பதற்கென்று உள்துறையமைச்சு பொறுப்பேற்றுள்ளது.

கட்டட நிர்மாணப் பணிகள் கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. முப்பது மில்லியன் ரூபா செலவில் இரண்டு அடுக்குமாடிக் கட்டட வேலைகள் அடுத்தாண்டு நடுப்பகுதியில் பூர்த்தி செய்யப்படும்.

இந்தக் கட்டடத்தில் நிர்வாக அலுவலகம், தங்குமிடம், நூல் நிலையம், கணினி என்பன இதில அமைக்கப்படவுள்ளன.

ஊர்காவல் படை பொறுப்பதிகாரி சிரேஷ்ட அத்தியட்சகர் திலக் வணிகசேகரர் இக்கட்டட விவரம் பற்றிக் கூறுகையில், ஒரே தடவையில் 100 ஊர்காவற் படையினர் பயிற்சி பெறமுடியும் என்று கூறியுள்ளார்.

முன்னர் பொறளையில் அமைந்த ஊர்காவல்படையினருக்கான பயிற்சி முகாம் சனாதிபதி பாதுகாப்புப் பிரிவினருக்குப் பயிற்சியளிக்க சில வருடங்களுககு முன்னர் பொறுப்பெடுக்கப்பட்டது.

இதனையடுத்தே இந்தப் புதிய பயிற்சி முகாம் அமைக்கப்படவுள்ளது.

# இரண்டாவது டெஸ்ட் போட்டியும் சமநிலையில் முடிவுற்றது

மொகாலியில் நடைபெற்ற இந்திய-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2ஆவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி சமநிலையில் முடிந்துள்ளது.

இப்போட்டியில் நியூசிலாந்து அணி தனது முதல் இனிங்சில் 6 விக்கெட்டுக்களை இழந்து 630 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. பின்னர் விளையாடிய இந்திய அணி தனது முதல் இனிங்சில் 424 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை இழந்தது. இதனால், இரண்டாவது இனிங்சையும் தொடர்ந்து விளையாட வேண்டிய நிலைக்கு (FolloW-on) இந்திய அணி உள்ளாகியது.

அது தனது இரண்டாவது இனிங்சில் 17 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களை இழந்தது. பின்னர் நாலாவது இணையான லக்ஸ்மன் - சோப்ரா ஆகியோர் நிதானமாக ஆடி தோல்வியைத் தவிர்த்தனர். முதல் இனிங்சில் 104 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்த லக்ஸ்மன் இரண்டாவது இனிங்சில் 67 ஓட்டங்களைப் பெற்றார். சோப்ரா இப்போட்டியில் 52 ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காது இருந்தார்.

நியூசிலாந்து தரப்பில் பந்து வீச்சாளர்கள் டரன் டப்பி, விட்டோரி, ஸ்டைரிஸ் ஆகியோரின் பந்து வீச்சு இந்திய துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலையச் செய்தது.

ஸ்கோர் விபரம், நியூசிலாந்து முதல் இனிங்ஸ் 630- 6 விக்கெட் (ஆட்டத்தை நிறுத்தியது) இந்தியா முதல் இனிங்ஸ் -424 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. இரண்டாவது இனிங்ஸ் - 136 - 4 விக்கெட்.




# 1ஆவது ஒரு நாள் போட்டியில் கங்குலியின் பங்கேற்பு இல்லை

இம்மாதம் 23ஆம் திகதியிலிருந்து தொடங்கவுள்ள மூன்று நாடுகள் பங்கேற்கவுள்ள ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின் முதலாவது போட்டியில் இந்திய அணித் தலைவர் கங்குலி விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 26ஆம் திகதி நடைபெறவுள்ள இரண்டாவது ஒரு நாள் போட்டியிலும் இவர் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமாகவுள்ளதாகக் கூறப்படுகின்றது. கடந்த 5 நாட்களில் இரண்டாவது தடவையாக கங்குலிக்கு தொடையில் ஏற்பட்ட கட்டி ஒன்றை அகற்ற சத்திர சிகிச்சை நடைபெற்றிருப்பதே இதற்குக் காரணமாகும்.

# யாழ்.இல் படையினர் முடக்கி வைத்துள்ள பாடசாலைகளை மீளப்பெறப் போராட வேண்டும்

## மாணவர்களுக்கு மாவைசேனாதிராஜா அறைகூவல்

யாழ்மாவட்டத்தில் படையினர் தமது பாதுகாப்பு வலய பிரதேசத்தின்கீழ் முடக்கி வைத்துள்ள பாடசாலைகளை மீண்டும் மாணவர்கள் கையில் ஒப்படைக்கக்கோரி வெகுஜனபோராட்டங்களில் ஈடுபட மாணவர் சமூகம் அணிதிரளவேண்டும் என

தமிழ்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா அறைகூவல் விடுத்துள்ளார்.

நேற்றையதினம் யாழ். உயர் தொழில்நுட்பநிறுவனத்தில் நடைபெற்ற "வித்தகம்" நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட முறையில் தமிழ் மக்களின் வாழ்வில் விளையாடி வரும் அரசும் அதன் படைகளும் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 439 பாடசாலைகளை முடக்கிவைத்து இப் பிரதேச மாணவர்களின் எதிர்காலத்துடன் விளையாடிவரும் படைகளைக் கண்டித்து போராட்டங்களில் ஈடுபடுவதற்கு அணிதிரள வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணனால் தமிழீழ தேசிய கொடி ஏற்றி ஆரம்பித்துவைக்கப்பட்ட இந்நிகழ்வில் போராளிகள், மாணவர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.(33)

# 'நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்' திருமலையில் நூல் அறிமுகவிழா

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் "நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள்" நூல் வரும் வியாழக்கிழமை விடுதலைப்புலிகளின் மூத்த தாக்குதல் தளபதி சாள்ஸ் அன்ரனி பிறந்த திருமலை மண்ணில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

தமிழீழத் தேசியத்தலைவரின் ஆசிச் செய்தியுடன் களமுனை தளபதிகளின் வாழ்த்துச் செய்தியுடன் படையணியின் பத்தாண்டு கால போர்க்களச் சாதனைகளையும் தாங்கி திருகோணமலை இந்துக் கல்லூரியில் தாயக நேரப்படி மாலை 3.00மணிக்கு நூல் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது.

# கலகமடக்கும் பொலிசார் குவிப்பு உரும்பிராயில் பெரும் பரபரப்பு

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலையை தொடர்ந்து அப்பகுதி எங்கும் பெரும் பரபரப்பு நிலவியுள்ளது.

நேற்றுமுன்தினம் உரும்பிராய்ச் சந்தியில் நின்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிசார்மீது பொதுமக்கள் நடத்திய கல்வீச்சினைத் தொடர்ந்து பொலிசார் செய்த துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் பொலிஸ்படை குவிப்பின் தொடர்ச்சியாக.

நேற்று அப்பகுதியில் பல நூற்றுக்கணக்கான படையினர் குவிக்கப்பட்டு கலகம் அடக்கும் ஆயுதங்கள் சகிதம் காவல் கடமையில் ஈடுபட்டதுடன் வீதியால் செல்லும் இளைஞர்களை சோதனை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் படையினருடன் முரண்பட்டால் கலகத்தில் ஈடுபடுவோரை சுட்டுத்தள்ளுவோம் எனவும் எச்சரிக்கை விடுவதைத் தொடர்ந்து இப பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (33)

### தனியாக...

காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. (மி)

### சந்திர..

முன்னணித் தலைவர் பொ. சந்திர சேகரன் அவர்களையும் 24ஆம் திகதி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களையும் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இதேவேளை நாளை புதன் கிழமை தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு நடைபெறவுள்ளமை தெரிந்ததே.

### இடைக்குறிச்சி...

களை வெட்டி தம் பதுங்கு குழிகளாக அவற்றைப்பயன் படுத்துவதுடன் அதில் பெறப்படும் மண்ணை மூடைகளாக்கி காவல் அரண்களில் அணைகளுக்குப் பயன்படுத்துகின்றனர்.

அத்துமீறி வீடுகளில் இருக்கும் யன்னல்கள், கதவுகள், கூரைகள் உட்பட்ட தளபாடங்களை வீடுகளில் எடுத்து தமது தேவைகளுக்காக படையினர் பயன்படுத்திவருகின்றனர் இதனால் தாம் சேர்த்த சொத்துக்களை நாசம் செய்வதை விட்டு படையினர் அகல்வதுடன் தமது மீள் குடியேற்றத்திற்கும் வழிவிடுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)


## பதவி வெற்றிடம்
## ஒப்புநோக்குநர்

ஈழநாதம் நாளேட்டில் ஒப்புநோக்குநர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். மாதாந்த வேதனம் 4000 ரூபா வழங்கப்படும். எதிர் வரும் 26-10-2003 அன்று காலை 10.00 மணிக்கு ஜெயந்திநகரில் உள்ள ஈழநாதம் பணிமனைக்கு நேரில் வருமாறு கோரப்படுகின்றனர்.

நிர்வாகம்


## படையினர் துப்பாக்கிச் சூடு

(யாழ்ப்பாணம்)

கோவிலாக்கண்டி மற்றும் தனங்கிளப்பு கடற்கரை ஓரக் காவல் அரண்களில் இருந்து சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தைப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக இரவு வேளையில் கரையோரத்திலிருந்து கடலை நோக்கி சரமாரியாக நடத்தப்படும் வேட்டுக்களால் இரவு வேளை பதற்றத்துடன் கழிவதாக அப்பகுதிக்குத் தொழிலில் ஈடுபட கடலுக்குச் செல்வோர் தெரிவித்துள்ளனர். (33)

### புதிய...

பேச்சிற்கு இடமில்லை என ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

கடலில் கப்பல் ஒன்றை பரிசோதிப்பதாயின் கடற்படையினர் கண்காணிப்புக் குழுவினருடன் சேர்ந்தே பரிசோதிக்க வேண்டும் என்பது புரிந்துணர்வு உடன் பாட்டின் பின்னர் நடைமுறையென்பது குறிப்பிடத்தக்கது.

### பாலியல்...

துஷ்பிரயோகம் செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதான மூன்று இளைஞர்களும் விளக்க மறியலில் வைக்கப் பட்டனர். இவர்களும் பாதிக்கப்பட்டு அநுராதபுரம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த இரண்டு பெண்களும் நேற்று வவுனியா நீதிமன்றில் ஆஜராக்கப்பட்டனர்.

மூன்று சந்தேக நபர்களும் கடுமையான பாதுகாப்புகளின் மத்தியில் வவுனியா மாவட்ட நீதவான் ந.இளஞ்செழியன் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது சந்தேக நபர்களின் தரப்பில் பிணை கோரப்பட்டது. எனினும், பொலிசாரும், பாதிக்கப்பட்ட பெண்கள் தரப்பில் ஆஜரான சட்டத் தரணிகளும் கடுமையான ஆட்சேபனை தெரிவித்ததனை அடுத்து நீதவான் பிணை வழங்க மறுத்தார்.

16 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளையினை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்று குற்றம் சாட்டப்பட்டால் நேரடியாக மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய முடியும். என்வே இது பாரதூரமான வழக்கு எனவும் தெரிவிக்கப் பட்டது. இதனால், இவர்களுக்கு பிணை வழங்கக்கூடாது என்றும் சட்டத்தரணிகள் கேட்டனர்.

பிணையினை வழங்க மறுத்த நீதவான் ந. இளஞ்செழியன் சந்தேக நபர்களை எதிர்வரும் 03-11-2003 வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட பெண்களில் ஒருவர் 14 வயதும், மற்றவர் 16 வயதும் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் மன்னார் விடுதியில் இரவு தங்கவைத்தமை தொடர்பாக மன்னார் விடுதியின் உரிமையாளரினை விசாரணைக்கு உட்படுத்தி நீதிமன்றில் ஆஜராக்குமாறும் நீதவான் ந. இளஞ்செழியன் மேலும் உத்தரவிட்டுள்ளார். (21)

# ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தே போட்டிகள் ஆரம்பம்

## 20 சுற்றுக்கள் நேற்று முடிவடைந்தன


(அலுவலக செய்தியாளர்)

தமிழர் தாயகப் பகுதியின் அனைத்து மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து தமிழீழ விளையாட்டுத் துறையால் நடாத்தப்படும் மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த்த கராத்தே சுற்றுப் போட்டி நேற்று கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியுள்ளது.

நேற்றுக் காலை 10.45 மணிக்கு ஆரம்பமாகிய இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரை சோதியா படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா, தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக் கொடியை வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றி வைத்தார். தமிழீழ விளையாட்டுத்துறைக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் ராஜன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மேஜர் ஈழப்பிரியாவின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். அடுத்து போட்டியாளர்கள் மற்றும் நடுவர்கள் சத்தியப்பிரமாணம் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து போட்டிக்கான ஆசியுரை வழங்கப்பட்டது.

ஆசியுரைகளை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா மற்றும் ஈழப்பிரியா கராத்தே





போட்டியின் பிரதம ஒழுங்கமைப்பாளரும் இலங்கை கராத்தே கலையின் தந்தையுமான கிறான் மாஸ்ரகீகான் பெனி றொபேட் ஆகியோர் வழங்கியதைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின.

இவ்வாறு நேற்று ஆரம்பமாகிய மூன்று நாள் போட்டியின் முதல் நாள் போட்டியில் 20 வயதுக்குட்ட ஆண், பெண் போட்டியாளர்களுக்கான 20 சுற்றுப் போட்டிகள்நிறைவு பெற்றுள்ளது.

மேற்படி போட்டிக்காக 300க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (லோ)

### வெலிக்கண்டல்...

போக்குவரத்துப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

எனவே, கிளிநொச்சியில் இருந்து இதனூடாகப் போக்குவரத்து மேற்கொள்பவர்கள் காக்கா கடைச் சந்தியூடாக வட்டக்கச்சியைச் சென்றடைந்து அதிலிருந்து புளியம்பொக்கணை சந்தி ஊடாக தமது பயணத்தை மேற்கொள்ளுமாறும், அதே போல் முல்லைத்தீவில் இருந்து இதனூடாகப் பயணிப்பவர்களையும் மேற்குறித்த பாதையூடாக பயணிக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (லோ)

### சனாதிபதி..

இந்தச் சம்பவம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று இரண்டு தடவைகள் பாதுகாப்புப் படையினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் பங்கேற்றனர். இன்றும் இவ்வாறான சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பாக கடற்படைத் தளபதி. சனாதிபதிக்கு அறிவித்ததையடுத்து அவர் நேற்று மாலை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியையும், மாகாண கடற்படைத் தளபதியையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார். இதன்போது சனாதிபதியினால் கடற்பகுதி பாதுகாப்பிற்கான கடுமையான உத்தரவுகள் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (32)

### பாதுகாப்பு...

கடற்பரப்பை பாதுகாத்தல் என்பனவும் உடன்படிக்கையில் இடம் பெறும் பாக்குநீரிணையில் மேற்கொள்ளப்படவிருக்கும் எண்ணெய ஆய்விற்கு இந்திய தொழில் நுட்பம் இலங்கையின் ஒத்துழைப்புடன் பயன்படுத்தப்படவுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை இந்திய இறைமைக்குப் பாதகம் ஏற்படும் வகையில் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படமாட்டாது என பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வு நகர்வு உரிய முறையில் கொண்டு செல்லப்படுமானால் இந்தியா அதற்கு ஆதரவு அளிக்குமென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார். அவ்வாறான சூழ்நிலையில் இந்தியா மேலதிக நிதி உதவிகளையும் இலங்கைக்கு வழங்கும் எனவும் அவர் குறிப்பிட்டார். (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.